# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



## இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்

எபிரெயர் 3:1


TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

March - April 2018
Volume : 58

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 2

# மத்திய CA வாலிபர் முகாம் – 2018
















ஆசிரியரிடமிருந்து........!

# இயேசுவைக் கவனிப்போம்! இயேசுவைப்போல வாழுவோம்!

இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் அவரைப் போல வாழ வேண்டும், அவருடைய சிந்தையை உடையவர்களாக இருக்க வேண்டும் என்று வேதம் வலியுறுத்துகிறது. தேவன் நம்மை அவருடைய குமாரனாகிய இயேசுவின் சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்து இருக்கிறார் (ரோமர் 8:29). ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபமாக்கப்படுகிறோம் என்று பவுல் கூறுகிறார் (2கொரி.3:18). மேலும் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராக வேண்டும் என்பதே நம்முடைய இலக்காக இருக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது (எபே. 4:13). நாம் இயேசுவைப் போல வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே இயேசுவின் வாழ்க்கையை சற்று கவனித்துப் பார்த்து அவரின் அடிச்சுவடுகளை பின்பற்ற தீர்மானிப்போம் (எபி. 3:1).

## 1. இயேசுவைப் போலக் கீழ்ப்படியுங்கள் : *Obey like Jesus*

கிறிஸ்துவின் சிந்தைக் கீழ்ப்படிதலின் சிந்தை. அவர் தனது முதல் 30 ஆண்டுகளில் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து நல்ல யூதனாக வாழ்ந்தார். தன்னுடைய பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருந்தார் (லூக்.2:51). அவர் தேவ குமாரனாயிருந்தும் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் என்று வேதம் கூறுகிறது (எபி. 5:8). இயேசு பிதாவுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த வாழ்க்கை வாழ்ந்தார். தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிவதே அவருடைய உணவாயிருந்தது (யோவான் 4:34). பிதாவின் சித்தம் செய்வதைத் தன்னுடைய குடும்பத்தைக் காட்டிலும் (மத். 12:46-50), தன்னுடைய சொந்த விருப்பத்தைக் காட்டிலும் (லூக்கா 22:42), தன்னுடைய சொந்த ஜீவனைக் காட்டிலும் (பிலி.2:8) முக்கியமாகக் கருதினார். பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிவதே அவருடைய பிரதான விருப்பமும், தாகமும், வாஞ்சையுமாயிருந்து (யோவான். 5:30 ; 14 : 31). ஆகவே இயேசுவைப் போல வாழ விரும்புகிற ஒவ்வொருவரும் அவர் கீழ்ப்படிந்தது போல கீழ்ப்படிய வேண்டும். பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம் (1 சாமு. 15:22).

## 2. இயேசுவைப் போல வேதத்தைப் படியுங்கள் : *Study the Bible like Jesus*

தேவனுடைய வார்த்தை இயேசுவின் வாழ்க்கையில் பரிபூரணமாக வாசமாயிருந்தது. 12 வயதில் தன்னுடைய வேத அறிவால் வேதப் பண்டிதர்கள் பலரை பிரமிக்கச் செய்தார் (லூக்கா 2 :46,47). இயேசுப் பழைய ஏற்பாட்டை நன்றாகக் கற்று மனனம் செய்து தன்னுடைய

சம்பாஷனையிலும், சோதனை நேரத்திலும் பயன்படுத்தினார் (மத்.4:10; லூக்கா 23:46). இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று யூதர்கள் ஆச்சரியப்பட்டார்கள் (யோவான் 7:15). நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா? என்று இயேசு பலமுறை கேட்பதைப் பார்க்கிறோம் (மத். 12:3,5; 19:5; 21:42; 22:3). அவர் நன்றாக வேதத்தை வாசித்திராத பட்சத்தில் அப்படிக் கேட்டிருக்க முடியாது. ஆகவே இயேசு கூறியபடி தினமும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து அவரைப் போல மாறுவோம் (யோவான் 5:39).

## 3. இயேசுவைப் போல ஜெபியுங்கள் : *Pray like Jesus*

இயேசுவினுடைய ஜெப வாழ்க்கையைக் கண்டு ஆச்சரியப்பட்ட சீஷர்கள் தங்களுக்கும் ஜெபிக்கக் கற்றுக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள் (லூக்கா 11:1). வனாந்தரமான இடங்களுக்கும், மலைகளுக்கும் சென்று தனித்து ஜெபிப்பது அவருடைய பழக்கமாயிருந்தது (மத்.14:23; மாற்கு 6:46; லூக்கா 5:16). இயேசு அதிகாலையில் பிதாவின் முகத்தைத் தேடினார் (மாற்கு 1:35). இராமுழுவதும் ஜெபித்தார் (லூக்கா 6:12) என்று வேதம் கூறுகிறது. ஜெபம் அவருடைய வழக்கமாகவும், சுவாசமாகவும் இருந்தது. இயேசு மற்றவர்களுக்காக ஜெபித்தார் (லூக்கா 22:32; 23:34), ஊக்கத்தோடே ஜெபித்தார் (லூக்.22:24), கண்ணீரோடே ஜெபித்தார் (லூக்கா19:41), பிதாவின் சித்தத்திற்கு அர்ப்பணித்து ஜெபித்தார் (மத்.26:39-54), ஸ்தோத்திரத்தோடே ஜெபித்தார் (மத்.15:36; லூக்கா 9:16). அவர் இன்றும் நமக்காக வேண்டுதல் செய்து கொண்டிருக்கிறார் (எபி. 7:25). ஆகவே நாமும் அவரைப்போல ஜெபிக்க அர்ப்பணிப்போம். குறிப்பிட்ட இடத்தில் நேரத்தில் அவரோடு உறவாடப் பழகுவோம், ஜெப வீரர்களாய் மாறுவோம்.

## 4. இயேசுவைப்போல அன்பு கூறுங்கள் : *Love like Jesus*

நான் உங்களிடத்தில் அன்பு கூறுவதுபோல, நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பாயிருங்களென்று இயேசு கூறினார் (யோவான் 13:34). கிறிஸ்துவே நமக்கு அன்பு கூறுவதில் சிறந்த மாதிரி. கிறிஸ்துவின் அன்பு மற்றவர்களுடைய நலனைத் தேடும் அன்பு, கொடுக்கும் அன்பு, தியாக அன்பு, ஆசீர்வதிக்கும் அன்பு, மன்னிக்கும் அன்பு (லூக்கா 7:36-50; மாற்கு 1:40-42; யோவான் 20:24-29;21:5-19,8:1-11). இயேசு சமுதாயத்தினால் மறக்கப்பட்டவர்கள், வெறுக்கப்பட்டவர்கள் மற்றும் தள்ளப்பட்டவர்களை நேசித்து, ஆசீர்வதித்து புதுவாழ்வைக் கொடுத்தார். கிறிஸ்துவின் அன்பின் உச்சக்கட்டத்தைக் கல்வாரி சிலுவையில் காண்கிறோம். அது தம்முடைய ஜீவனையே நமக்காகக் கொடுத்த அன்பு (யோவான் 15:13;1 யோவான் 3:16). ஆதலால் இயேசு நம்மில் அன்பு கூர்ந்தது போல நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள் (எபே.5: 1,2).

## 5. இயேசுவைப்போலத் பரிசுத்தமாயிருங்கள் : *Be Holy like Jesus*

பரிசுத்த வாழ்க்கைக்கு இயேசு நமக்கு சிறந்த முன்மாதிரி. இயேசுவினுடைய பரிசுத்தம் அவர் அக்கிரமத்தை வெறுத்து, நீதியை விரும்பினதில் விளங்குகிறது. (எபி.1:9). இயேசு வார்த்தைகளிலும் செய்கையிலும் பரிசுத்தராயிருந்தார். அவர் பாவம் செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனையோ, பொய்யோ காணப்படவுமில்லை (1 பேதுரு 2:22; யோவான் 8:46; 1யோவான் 3:5). அவர் எப்பொழுதுமே தேவனுக்குப் பிரியமானவைகளையே செய்து வந்தார் (யோவான் 8:9; மத்தேயு 17:5). அவர் எல்லா விதத்திலும் நம்மைப்போலச் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருந்தார் (எபி. 4:16).

அவருடைய பரிசுத்தத்தைக் குறித்து அநேகர் சாட்சி கொடுத்தார்கள். இவர் தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையென்று சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளி ஒருவன் கூறினான் (லூக்கா 23:41). நான் இவரில் ஒரு குற்றத்தையும் காணவில்லை என்று பிலாத்து கூறினார் (லூக்கா 23:4). மெய்யாகவே இவர் நீதிபரர் என்று ஒரு நூற்றுக்கு அதிபதியும் (லூக்கா 23:47), குற்றமில்லாதவரரென்று அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அறிக்கையிட்டனர் (மத்.27:4). பிலாத்துவினுடைய மனைவி அவர் நீதிமானென்று கூறினாள் (மத். 27: 19). இந்த உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை என்று இயேசு சவால் விட்டுக் கூறினார் (யோவான் 14:30). ஆகவே நாமும் அவரைப் போல நம்முடைய எல்லா நடக்கையிலும் பரிசுத்தமாயிருப்போம் (1 பேதுரு 1: 15).

**6. இயேசுவைப்போல தாழ்மையாயிருங்கள் :** ***Be Humble like Jesus***

இயேசுவின் சிந்தை தாழ்மையின் சிந்தை. நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாயிருக்கிறேன் என்று இயேசு கூறினார். (மத்.11:29). தன்னை தாழ்த்தி இவ்வுலகத்திற்கு மனிதனாக வந்தார். மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார் (லூக்கா 2:7). பாவிகளின் சிநேகிதனாக வாழ்ந்தார் (மத்.11:19). சீஷர்களின் கால்களை கழுவினார் (யோவான் 13:12-17). சிலுவையின் மரணபரியந்தம் தன்னைத் தாழ்த்தினார் (பிலி.2:8). தாழ்மையைக் கற்றுக் கொடுத்தார் (மத். 18:1-4; லூக்கா 14:7-11). மேன்மைக்கு முன்னானது தாழ்மை என்பதற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டினார் (நீதி.15:33;18:12; பிலி. 2:9-11).

**7. இயேசுவைப்போல ஊழியம் செய்யுங்கள்:** ***Serve like Jesus***

இயேசு மற்றவர்களுக்கு ஊழியம் செய்யத் தன்னை முற்றிலும் அர்ப்பணித்தார். அவர் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யும்படிக்கே வந்தார் (மாற்கு 10:45). இயேசு சாதாரண வேலைக்காரர்கள் செய்யும் வேலையையும் செய்யத் தயங்கவில்லை. சீஷர்களின் பாதங்களைக் கழுவினார் (யோவான் 13: 1-5,15-17; லூக்கா 22:27). வியாதியஸ்தர்களுக்கு சுகம் தந்தார் (லூக்கா4:40). பசித்தவர்களுக்குப் போஜனம் கொடுத்தார் (மத்.15: 22). போஜனம் பண்ணவும் சமயமில்லாத அளவிற்கு ஜனங்களை முன்வைத்து ஊழியம் செய்தார் (மாற்கு 3:20). பட்டணங்கள், கிராமங்கள்தோறும் சுற்றி நடந்து சுவிசேஷத்தை அறிவித்தார் (மத்தேயு 4:23). ஜனங்களுக்கு நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்தார் (அப்.10:38).ஜனங்களுக்காக மன்றாடினார். ஜனங்களுக்கு வசனத்தைப் போதித்தார். ஜனங்களுக்காகத் தம்முடைய ஜீவனையே கொடுத்தார். இயேசுவின் சீஷர்கள் அவருடைய வழியில் ஜனங்களுக்கு ஊழியம் செய்தனர் என அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் வாசிக்கிறோம்.

தேவ ஜனமே, இயேசு நமக்கு மாதிரியை வைத்துச் சென்றிருக்கிறார் (யோவான் 13: 15; 1 பேதுரு 2:21). நாம் அந்த மாதிரியைப் பின்பற்றுவோம். இயேசுவைப் போல மாறுவோம். அவ்வுலகை இயேசுவின் பக்கம் திருப்புவோம்.

**Rev.Dr. ஜெரி டேனியல்,**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்),
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி.



# ஜெபத்தைக் குறித்த இயேசுவின் போதனைகள்

Rev. Dr. ஜார்ஜ் உட்
தலைவர் - அகில உலக ஏ.ஜி. சபைகள்

சுவிசேஷப் புத்தகங்களில் இயேசு கிறிஸ்துவின் ஜெபப் போதனைகள் மத்தேயு சுவிசேஷத்தில் பத்து இடங்களிலும், மாற்கு சுவிசேஷத்தில் ஐந்து இடங்களிலும், லூக்காவில் பத்து இடங்களிலும், யோவானில் மூன்று இடங்களிலும் உள்ளது. இயேசுவின் ஜெபத்தைக் குறித்து போதனைகளிலிருந்து 15 காரியங்களை நாம் கற்றுக்கொள்ள முடியும்.

1.உ ங்கள் எதிராளிகளுக்காக ஜெபியுங்கள் (மத்தேயு 5:44) என்று இயேசு தன் ஜெபப் போதனையைத் துவக்கினார். ஜெபத்தைக் குறித்து இயேசு கூறிய முதலாவதாக காரியம் இதுவாகும். லூக்கா 6:28-ம் இதே காரியத்தையே வலியுறுத்துகிறது. இவ்வாறு இயேசு கற்பிப்பதற்குக் காரணம் நம்முடைய குணாதிசயம் தேவனுடைய மாதிரியைப் பின்பற்றுவதாக இருக்க வேண்டும். நம் எதிராளிகளுக்காக ஜெபிப்பதற்கு நான்கு விதமான காரியங்களைச் செய்ய வேண்டும். அவர்களை நேசிக்க வேண்டும், அவர்களைப் பற்றி நன்மையாகப் பேச வேண்டும், அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும், ஜெபிக்க வேண்டும்.

2. தனித்திருந்து ஜெபிக்க வேண்டும் (மத்தேயு 6:5-6). பொது இடங்களில் ஜெபிப்பது தவறு என்று சொல்லவில்லை. மற்ற நபர்களைக் காட்டிலும் நான் மிகவும் பரிசுத்தவான், ஆவிக்குரிய நிலையில் உயர்ந்தவன் என்று காட்டிக் கொள்ளும் தவறான எண்ணத்தைச் சரி செய்கிறார். ஜெபத்தின் இரகசியமே இரகசியமாக ஜெபிப்பதுதான்.

3. குறிப்பாக ஜெபிக்க வேண்டும் (மத்தேயு 6:7-13; லூக்கா 11:1-4). நாம் பரமண்டல ஜெபத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, மீண்டும், மீண்டும் ஒரே காரியத்தை சொல்லி அலப்பும் ஜெபத்தை இயேசு சரிபடுத்துவதைப் பார்க்கிறோம். பரமண்டல ஜெபம் நாம் குறிப்பாக ஜெபிக்கவும், உண்மையாக ஜெபிக்கவும் கற்றுக் கொடுக்கிறது.

4. விடாப்பிடியாக ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும் (லூக்கா 11:5-13; மத்தேயு 7:7-11). இந்த இரண்டு வேதபகுதியும் ஒரே காரியத்தைக் கற்பிக்கிறது. தொடர்ச்சியாகக் கேட்பது, தொடர்ந்து தேடுவது, தொடர்ந்து தட்டுவது. மேலும் லூக்கா 18:1-8-ல் பதில் கிடைக்கும் மட்டும் ஜெபத்தில் உறுதியாக இருப்பதைக் குறித்து இயேசு ஒரு உவமையை சொன்னார்.

5. அறுவடைக்கு ஆட்கள் வேண்டி ஜெபிக்க வேண்டும் (மத்தேயு 9:38;லூக்கா 10:2). திரளான ஜனக்கூட்டத்தைக் கண்டு, இயேசு “அறுவடையோ மிகுதி வேலையாட்களோ இல்லை” என்றார். சபையின் உண்மையான பிரச்சனை ஊழியத்திற்கு ஆட்கள் தேவை என்பதே. ஆகவே அறுவடைக்கு ஆட்களை தேவன் எழுப்ப ஜெபிக்க வேண்டும்.

6. நாம் உபவாசத்தோடு ஜெபிக்க வேண்டும் (மாற்கு 9:29). நாம் ஜெபிக்காதபோது அன்றாட வாழ்வில் நமக்கு இருக்கும் பிரச்சனைகளை எதிர்கொள்ள

ஆவிக்குரிய அதிகாரம் நமக்கு இல்லாமல் போய்விடும். சீஷர்களுக்கு இந்தப் பிரச்சனை இருந்தது. உபவாசத்தோடு ஜெபிக்கும்போது நமக்குள் மாற்றம் ஏற்படுகிறது. பிரச்சனைகளை எதிர்கொள்ள வல்லமை அதிகரிக்கிறது.

7. **மற்றவரோடு ஒருமனப்பட்டு ஜெபிக்க வேண்டும்** (மத்தேயு18:19-20). இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். ஒருமனப்பட்டு ஜெபிக்கும்போது பதில் கிடைக்கும் என்று இயேசு வாக்குப்பண்ணியுள்ளார்.

8. **தாழ்மையோடு ஜெபிக்க வேண்டும்** (லூக்கா 18:9-14). பரிசேயன் மற்றும் ஆயக்காரன் ஆகியோரின் ஜெபத்தைக்குறித்த உவமையில் நாம் தாழ்மையாக ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கற்பித்தார்.

9. **ஆராதிக்கிற இடம் ஜெபிக்கிற இடமாக இருக்க வேண்டும்** (மத்தேயு 21:13; மாற்கு 11:17; லூக்கா 19:46). மூன்று சுவிசேஷப் புத்தகத்திலும் நாம் கூடும் ஆலயம் ஜெபிக்கிற இடமாக இருக்க வேண்டும் என இயேசு கூறியதாக கூறப்பட்டுள்ளது.

10. **விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும்** (மாற்கு 11:22-24; மத்தேயு 21:22).தேவன் மேல் விசுவாசமாய் இருங்கள் என்று இயேசு சொன்னார். "எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி தான் சொன்னபடியே நடக்கும்" என்று தன் இருதயத்திலே சந்தேகப்படாமல் விசுவாசித்தால் அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்.

11. **மன்னிக்கும் குணத்துடன் ஜெபிக்க வேண்டும்** (மாற்கு 11:25). நாம் ஜெபிக்கும் போது நம்மை சுற்றிப் பார்த்து ஒருவர் பேரில் யாதொரு குறை உண்டாயிருக்குமானால் அந்தக் குறையை அவர்களுக்கு மன்னியுங்கள் என்று இயேசு சொன்னார். மத்தேயு 5:23-24 பார்க்கவும்.

12. **நீதியோடு ஜெபிக்க வேண்டும் :** ஜெபத்தின் மூலம் தன்னுடைய சுயநலத்திற்காக ஜனங்கள் மேல் அதிக உரிமை எடுத்துக்கொண்ட பரிசேயர்களை மாற்கு 12:40-ல் குற்றம் சாட்டுகிறார். சுயநலத்திற்காக ஆவிக்குரிய வேஷம் தரிக்கின்றனர். நம்முடைய வாழ்வில் எல்லாக் கட்டத்திலும் உண்மையாகவும் நேர்மையாகவும் இருந்து ஜெபிக்க வேண்டும்.

13. **ஆபத்துக் காலத்தில் நீங்கள் காப்பாற்றப்படுவதற்கும், இரண்டாம் வருகையில் தேவனுக்கு முன்பாக தகுதியுள்ளவர்களாய் நிற்பதற்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்** (மத்தேயு 24:20; மாற்கு 13:18; லூக்கா 21:36). இது உபத்திரவ காலத்தைக் குறிக்கிறது.

14. **இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க வேண்டும்** (யோவான் 14:13-14;15:7;16:23-26). இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கும்போது ஜெபத்திற்கு இயேசு கிறிஸ்துவின் அதிகாரம் உறுதுணையாக நிற்கிறது.

15. **கடைசியாக நாம் சோதனைகளுக்கு தப்பித்துக் கொள்ள ஜெபிக்க வேண்டும்** (லூக்கா 22:39). கெத்சமனே தோட்டத்தில் பேதுருவையும், சீஷர்களையும் பார்த்து சோதனைக்கு உட்படாதபடி விழித்திருந்து ஜெபியுங்கள் என்றார். ஜெபம் இல்லையென்றால் ஆவிக்குரிய வாழ்வில் நாம் பெலவீனம் உள்ளவர்களாக மாறிவிடுவோம்.

இந்த 15 ஜெப போதனைகளின் அடிப்படையில் கீழ்கண்ட கேள்விகளை உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளும்படி உங்களை உற்சாகப்படுத்துகின்றேன்.

1. நான் ஜெபிக்கின்றேனா?
2. என் எதிராளிகளுக்காக ஜெபிக்கின்றேனா?
3. தனித்திருந்து ஜெபிக்கின்றேனா?
4. குறிப்பாக ஜெபிக்கின்றேனா?
5. விடாமுயற்சியுடன் ஜெபிக்கின்றேனா?
6. அறுவடைக்குத் தேவையான ஆட்களுக்காக ஜெபிக்கின்றேனா? சபையில் வேலை செய்பவர்களுக்காக ஜெபிக்கின்றேனா? எதிர்காலத்தில் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்பவர்கள் எழும்ப ஜெபிக்கின்றேனா?
7. நான் ஜெபத்தினால் ஜெயம் பெறுகின்றேனா?
8. மற்றவர்களோடு ஒற்றுமையாய் ஜெபிக்கின்றேனா?
9. உண்மையுடனும், தாழ்மையுடனும் ஜெபிக்கின்றேனா?
10. ஆராதிக்கும் ஸ்தலத்திலே ஜெபிக்கின்றேனா? ஜெபிக்கும் நோக்கத்தோடு சபைக்கு வருகின்றேனா?
11. விசுவாசத்தோடு ஜெபிக்கின்றேனா?
12. மன்னிக்கும் குணத்தோடு ஜெபிக்கின்றேனா? நான் பரிசுத்தமுள்ளவனாய் இருக்கின்றேனா? நான் மன்னிக்க வேண்டிய நபர் யாரேனும் இருக்கின்றனரா?
13. நீதியுள்ளவனாய் ஜெபிக்கின்றேனா?
14. ஆபத்துக் காலத்தை எதிர்கொள்ள ஜெபிக்கின்றேனா?
15. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கின்றேனா?
16. சோதனையைத் தவிர்ப்பதற்கு ஜெபிக்கின்றேனா?

புதிய ஏற்பாட்டில் இன்னும் அதிக போதனைகளும் உண்டு. இது ஒரு ஆரம்பமே.

**தேவனே! ஜெபிக்க எங்களுக்குக் கற்றுத்தாரும்!**

(மொழியாக்கம் செய்யப்பட்டது)

---

தாங்கள் பரிபூரண ஜீவனுக்கு அனுப்புகிற செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**பரிபூரண ஜீவன்,** ஆசிரியர். **Rev. Dr. ஜெரி டேனியல்**
43/3 ஆபிசர்ஸ் காலனி, புத்தூர், திருச்சி - 17
செல் : 94434 15484



# விசுவாசிகளே! தேவனுக்கு சேவை செய்யுங்கள்

Rev. P.S. ராஜமணி
இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

அப்போஸ்தலர் 6.1-7

ஆதிசபை வேகமாக வளர்ந்தது. இரண்டு ஆண்டுகளில் சுமார் 20,000 பேர் சபையில் சேர்ந்தனர் என்று சபை சரித்திரம் கூறுகிறது. சபை வளர்ந்தபோது சில பிரச்சனைகளும் தலைதூக்க ஆரம்பித்தன. இந்தக் காரியம் இன்றும் உண்மை. சபை சிறிய அளவில் இருக்கும்போது பிரச்சனைகள் அதிகம் இருக்காது. சபை வளரும்போது பலதரப்பட்ட மக்களும் சபைக்கு வரும்போது கருத்து வேறுபாடுகள் உண்டாகி பிரச்சனைகள் எழும்ப ஆரம்பிக்கும்.

இதுதான் ஆதிசபையிலும் நடந்தது. சபையிலிருந்த கிரேக்கருக்கும், எபிரேயருக்கும் கருந்து வேறுபாடுகள் உண்டாயின. கிரேக்க விதவைகள் சரியாக பராமரிக்கப்படவில்லை என்று முறுமுறுப்பு உண்டாயிற்று. அப்போஸ்தலர்கள் இந்த பிரச்சனையைக் குறித்து ஆலோசித்தனர், இந்தப் பிரச்சனையை தீர்க்க ஒரு குழுவை நியமிக்க தீர்மானம் பண்ணினர். அப்படி நியமிக்கப்படுகின்றவர்களின் தகுதி எவை என்றும் எத்தனை பேர் அதில் இருக்க வேண்டும் என்றும் முடிவு செய்தனர்.

## இந்த பந்தி விசாரணைக் குழுவினர் :

1) 7 பேர், 2) அவர்களுடைய தகுதிகள், 3) அவர்களை சபையாரே தேர்ந்தெடுக்க வேண்டும்.

## இவர்களின் தகுதிகள் அப்போஸ்தலரால் வகையறுக்கப்பட்டன

1. பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டவர்கள்
2. ஞானம் நிறைந்தவர்கள்
3. நற்சாட்சி பெற்றவர்கள்

இதில் பணமோ, செல்வாக்கோ, பதவியோ கூறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இன்று சபைகளில் இப்படிப்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் சபை நிர்வாகம் நன்றாக இருக்கும்.

## அப்போஸ்தலர் தங்களைக் குறித்து எடுத்த தீர்மானம்

1) நாங்கள் ஜெபத்திலே இடைவிடாமல் தரித்திருப்போம்.

2) தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் தொடர்ந்து இருப்போம்.

இன்று சபைத் தலைவர்கள் இந்த தீர்மானம் எடுத்து செயல்பட்டால் சபைகள் ஆரோக்கியமான நிலையில் வளரும், பெருகும். தலைவர்கள் சபையின் பிரச்சனைகளை தாங்களே தீர்க்க முயற்சிப்பதினால் தான் குழப்பங்கள் அதிகமாகின்றன. சபைத் தலைவர்களுக்கு ஜெபம் பண்ண நேரமில்லை. தேவ செய்திகளை சரியாக ஆயத்தம் செய்து பிரசங்கிக்க போதிய நேரம் எடுப்பதில்லை.

சபைகளில் பிரச்சனைகளை பேசி தீர்மானம் எடுப்பதில் தான் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

இன்று சபைகளின் பிரச்சனைகளைத் தீர்க்க, சபையின் நிர்வாகக் காரியங்களை கவனிக்க தேர்ந்தெடுக்கப்படும் நபர்களில் பலர் ஆவிக்குரியவர்களாக இல்லை. நல்ல படிப்பும், பதவியும், செல்வாக்கும் இருப்பவர்களைத் தான் சபை தேர்ந்தெடுக்கிறது. இவர்களில் சிலர் பெரியவர்களாய் இருக்கலாம். சிலர் மாம்சபிரகாரமாக செயல்பட ஆரம்பிக்கின்றனர்.

## தெரிந்து கொள்ளப்பட்ட 7 பேரில் ஒருவன் பிலிப்பு

இவன் மேற்கூறிய காரியங்களில் தகுதியுடையவனாக இருந்தான். ஆனால் பந்தி விசாரணை செய்தோடு கிளை ஊழியம் ஆரம்பிக்கவும் முன்வந்தான். இன்று சபையிலுள்ள ஆவிக்குரிய விசுவாசிகள் சபைப் போதகருக்கு உதவியாக செயல்பட வேண்டியது அவசியம். சபையின் பிரச்சனைகளை தீர்க்க தகுதியானவர் என்று சபை விசுவாசிகள் காண வேண்டும்.

## பிலிப்பு சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்கு சென்று நற்செய்தி அறிவித்தான் (அப்போஸ்தலர் 8:5-8)

பந்திவிசாரணை செய்வது நமது வேலை என்று நிறுத்திக் கொள்ளாமல் கிளை ஊழியம் செய்ய ஆர்வம் கொண்டான். இன்று சபையிலுள்ள திறமையுள்ள விசுவாசிகள் பலர் ஞாயிறு ஆராதனைகளுக்கு வருவதோடு தங்கள் வேலை முடிந்தது என்று எண்ணுகிறார்கள். ஆராதனைகளில் கலந்து கொள்வது அவசியம்தான். ஆனால் அதோடு உங்கள் கிறிஸ்தவ வாழ்வு முடிந்து போகக்கூடாது.

பிலிப்பு எருசலேமைவிட்டு சமாரியவிற்கு சென்று நற்செய்தியை பிரசங்கித்தான். ஒவ்வொரு விசுவாசியும் நற்செய்தி அறிவிக்கின்றவர்களாய் மாற வேண்டும். இயேசுவை அறியாத மக்களுக்கு இயேசுவின் நற்செய்தி அறிவிக்க வேண்டியது ஒவ்வொரு விசுவாசியின் கடமை.

## பிலிப்பின் மூலம் அற்புதங்கள்

பிலிப்பு ஜெபித்தபோது அசுத்த ஆவிகள் ஓடின. திமிர்வாதக்காரர். சப்பாணிகள் குணமானார்கள். பெரிய சுவிசேஷகர்கள் தான் இதை செய்வார்கள் என்ற எண்ணம் மாற வேண்டும். நம் ஒவ்வொருவருக்குள்ளும் இயேசு இருக்கின்றார். தேவ வரங்களைக் கொடுக்கின்ற பரிசுத்த ஆவி நமக்குள்ளே இருக்கின்றார். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள் என்று இயேசு வாக்குப்பண்ணியுள்ளார் (மாற்கு 16:17,18). எனவே விசுவாசிகள் தைரியத்துடன் இயேசுவை அறியாத மக்களுக்கு நற்செய்தி அறிவித்து அவர்கள் தேவைகளுக்காக ஜெபிக்க வேண்டும். ஆண்டவர் நிச்சயம் உங்கள் மூலம் அற்புதங்களை செய்வார்.

## பிலிப்பின் மூலம் சமாரியாப் பட்டணம் மகிழ்ந்தது (அப்போஸ்தலர் 8:8)

பட்டணமே அசைக்கப்படும் அளவிற்கு கர்த்தர் பிலிப்பை பயன்படுத்தினார். அநேகர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஞானஸ்தானம் பெற்றார்கள். அந்தப் பட்டணத்தில் ஓர் சபை உருவானது. நமது தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. ஞாயிறு ஆராதனைக்கு உங்களுடைய சபைக்கு செல்லுங்கள், இடை நாட்களில் போதகர் உங்களை வழி நடத்துகின்றபடி ஒரு கிராமத்தை தெரிந்துகொண்டு அங்கே குடும்பமாகச் சென்று

நற்செய்தி அறிவித்து ஒரு கிளை ஊழியத்தை ஆரம்பியுங்கள் அல்லது ஒரு வீட்டு சபையை ஆரம்பியுங்கள்.

## பிலிப்பின் மூலம் எத்தியோப்பியாவில் நற்செய்தி

சமாரிய சபை வளர்ந்து கொண்டிருந்தது. கர்த்தருடைய வார்த்தை பிலிப்பிற்கு வந்தது. 'நீ எழுந்து தெற்கே வனாந்தர மார்க்கமாக போ' என்ற கட்டளை. இப்போதுதான் சமாரியாவில் நல்ல சபை உருவாகி வருகிறது, இதை விட்டு விட்டு போகலாமா என்று பிலிப்பு யோசிக்கவில்லை. கர்த்தருடைய ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்து ஆளில்லாத வனாந்தரத்திற்குப் போகிறான். அங்கே ஒரு ரதம் வருகிறது. அது எத்தியோப்பிய தேசத்து நிதி மந்திரியின் ரதம். அந்த மந்திரி எருசலேமுக்கு வந்து கர்த்தரை தொழுது கொண்டுவிட்டு தன் நாட்டிற்கு திரும்பிப் போய்க் கொண்டிருந்தான். பரிசுத்த ஆவியானவர் அந்த இரதத்துடன் சேர்ந்துகொள்ள பிலிப்பை ஏவினார். அந்த மந்திரி ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தான். பிலிப்பு அவனுடன் இரதத்தில் அமர்ந்து ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தை விளக்கினதோடு இயேசுவின் நற்செய்தியையும் அறிவித்தான். அந்த மந்திரி இயேசுவை ஏற்றுக்கொண்டான் உடனே பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். இந்த உரையாடல் நடந்தபோது எவ்வளவு தூரம் இரதம் சென்றது என்று தெரியாது. ஆனால் பிலிப்பு அந்த மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்த பின்பு அவனை ஆவியானவர் கொண்டு போய்விட்டார்.

மந்திரிக்கு ஒரே ஆச்சரியம். கர்த்தரே இவரை அனுப்பினார் என்று நிச்சயித்து அகமகிழ்ந்தார். இந்த மந்திரி மூலம் எத்தியோப்பியாவிற்கு இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி சென்றது.

பந்திவிசாரணை செய்து வந்த பிலிப்பை கர்த்தர் பல நிலைகளிலும் பயன்படுத்தியுள்ளார்.

சமாரியாவில் நற்செய்தி அறிவித்து அற்புத அடையாளங்களை நடப்பித்து ஓர் நல்ல சபையைக் கட்டி எழுப்ப பயன்படுத்தினார். இந்த பிலிப்பு மூலம் எத்தியோப்பியாவிற்கும் நற்செய்தி பரவ கர்த்தர் பயன்படுத்தினார்.

## இதை வாசிக்கும் போதகர்களே !

உங்கள் சபையிலுள்ள தகுதியான விசுவாசிகளை ஊழியத்தில் பயன்படுத்துங்கள். உங்கள் மூலம் அருகிலுள்ள கிராமங்களில் சபைகள் ஆரம்பித்து பெருக ஆவண செய்யுங்கள். நீங்கள் எல்லா இடங்களுக்கும் போக முடியாது. ஆனால் உங்கள் சபையிலுள்ள ஆண்களையும். பெண்களையும் பயன்படுத்துங்கள். கர்த்தர் உங்கள் ஊழியங்களை வளரச் செய்வார்.

---

**அன்பான வாசகர்களுக்கு**

இந்த பத்திரிக்கையை தனிப்பிரதியாக தபாலில் பெற விரும்புவோர் தங்களுடைய முழு முகவரியும் மற்றும் தொலைபேசி எண்ணையும் கீழ்காணும் எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள். பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். நன்றி

**Cell: 96003 28821**

# ஜான் ஹார்ப்பர் - டைட்டானிக் ஹீரோ



டைட்டானிக் கப்பலை (Titanic ship) கட்டிய மனிதரிடம் ஒருவர் 'இது எவ்வளவு பாதுகாப்பானது' என்று கேட்டதற்கு, 'அவர் ஆண்டவர்கூட இதை மூழ்கடிக்க முடியாது' என்று ஆணித்தரமாகக் கூறினாராம். ஆனால் அந்தக் கப்பலுக்கு என்ன வாயிற்று என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அதில் பயணம் செய்த 1528 மக்களில், ஆறுப் பேரே காப்பாற்றப்பட்டனர். அதை திரைப்படமாக எடுத்து, Leonardo DiCaprio-யை ஹீரோவாக சித்தரித்திருந்தார்கள். ஆனால் அந்தக் கப்பலில் இருந்த உண்மை ஹீரோவைப் பற்றி பார்க்கப் போகிறோம்.

ஜான் ஹார்ப்பர் (John Harper) என்னும் அருமையான மனிதர் கிறிஸ்துவ பெற்றோருக்கு 1872-ம் ஆண்டு பிறந்தார். அவர் தனது 13 ஆவது வயதில் கர்த்தரை ஏற்றுக்கொண்டு, நான்கு வருடங்கள் கழித்து, கர்த்தரைக்குறித்து அறிவிக்க ஆரம்பித்தார். அவருக்கு திருமணமாகி, மனைவி நான்கு வருடங்களுக்குள் மரித்துப் போனார்கள். அவர்களுக்கு நீனா (Nina) என்னும் பேர் கொண்ட அருமையான பெண் குழந்தை இருந்தது. ஹார்ப்பர், மூடிபிரசங்கியாரின் ஆலயத்தில் பேசுவதற்காக சிக்காகோவிற்கு (Chicago) அழைக்கப்பட்டிருந்தார். அதற்காக 1912-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ம் தேதி அவரும் அவருடைய பிள்ளை நீனாவும் டைட்டானிக் கப்பலில் ஏறினார்கள்.

எதிர்பாராத விதமாக, பனிமலையின்மீது மோதி கப்பல் மூழ்க ஆரம்பித்த போது, அவர் தனது மகள் நீனாவை உயிர்க்காக்கும் (Life Boat) படகில் ஏற்றிவிட்டு, 'நான் உன்னை ஒரு நாள் காண்பேன்' என்றுச் சொல்லி, அனுப்பி வைத்தார். அவருக்கும் படகில் போக இடமிருந்தாலும், அவர் மற்ற மக்களை காக்கும் பொருட்டு அதை விட்டுவிட்டு, தன் மகளை அனுப்பிவைத்தார். பின் மரணபயத்தோடு இருந்த மக்களிடம் வந்து, 'பெண்களும், சிறுபிள்ளைகளும், இரட்சிக்கப்படாதவர்களும், முதலில் உயிர்காக்கும் படகில் ஏறுங்கள்' என்று அவர் கூறிக்கொண்டு இருக்கும்போதே கப்பல் மூழ்க ஆரம்பித்தது. கப்பலில் இருந்து பயணிகள், கீழே ஐஸ் தண்ணீரில் குதிக்க ஆரம்பித்தார்கள். அதில் ஹார்ப்பரும் ஒருவராவார்.



அந்த நடுங்கும் குளிரிலும் ஹார்ப்பர், மக்கள் அந்த குளிரில் உறைந்து மரிக்குமுன்னே, அவர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்த ஆரம்பித்தார். அப்போது, ஒரு இளம் வாலிபன், அங்கிருந்த ஒரு கட்டையின் மேல் ஏறி தப்பும்படி போராடிக் கொண்டு இருப்பதைக் கண்டார். அவனிடம், 'நீ இரட்சிக்கப்பட்டாயா? என்றுக் கேட்டார்'. அவன் இல்லை என்றுக் கூறினான். உடனே தன் மேலே இருந்த உயிர்காப்பு

மிதவை ஆடை (Life Boat) எடுத்து, அந்த வாலிபனுக்கு கொடுத்து, 'என்னைவிட உமக்குத்தான் அது தேவை' என்றுக் கூறிவிட்டு, மற்ற பயணிகளுக்கு சத்தியத்தைச் சொல்லச் சென்றார். பின் மீண்டும் அந்த வாலிபனிடம் வந்து, அவனுக்கு சத்தியத்தைச் சொல்லி, கிறிஸ்துவுக்குள் அவனை வழிநடத்தினார். அன்று மூழ்கின 1528 பேரில் ஆறுப் பேரே காப்பாற்றப்பட்டனர். அதில் அந்த வாலிபனும் ஒருவன்.

நான்கு வருடங்கள் கழித்து, அந்த ஆறுப்பேரையும் சேர்த்து நடந்தக் கூட்டத்தில் அந்த வாலிபன் கண்ணீரோடு எழுந்து நின்று, தனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும், ஹார்ப்பர் எப்படி அந்த பனிநீரிலும், மற்றவர்களுக்கு சுவிசேஷத்தைக் கூறினார் என்பதையும், அவர் நீந்த முடியாமல் கடைசியில் பலவீனமடைந்து, தண்ணீரில் மூழ்கும் நேரம் வந்தபோது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள், அப்போது நீங்கள் இரட்சிக்கப் படுவீர்கள் என்று கூறிக் கொண்டே மூழ்கியதையும் நினைவு கூர்ந்து கதறினான். மற்றவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்ற எப்படியாவது உயிர் காப்பாற்றும் படகை பிடிக்க வேண்டும் என்று போராடிக் கொண்டிருந்த வேளையில் தனக்கு கிடைத்த வாய்ப்பையும் மற்றவர்களுக்கு கொடுத்து, தனது உயிரையும் கொடுத்த அற்புத மனிதரை ஹாலிவுட் படமெடுக்காம லிருக்கலாம். ஆனால், பரலோகத்தில் அவருக்கு நிச்சயம் பதில் செய்யப்படும். ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. ஆமென்.

நிச்சயமாகவே ஹார்ப்பர் ஒரு அற்புத ஹீரோதான். ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக நீங்கள் எடுக்கும் பிரயாசம் என்ன?

---


தேவனுக்கே மகிமை

# தமிழ் பிரதேச அசெம்பிளிஸ் ஆஃப் காட்




ASSEMBLIES OF GOD

வழங்கும் ...

TV நிகழ்ச்சி

பாருங்கள்! பயனடையுங்கள் !!

தமிழன் தொலைக்காட்சியில் வியாழக்கிழமை தோறும் காலை 7.30 மணி முதல் 8.00 மணி வரை

தேவ செய்தி அளிப்பவர்கள்

**Rev.P.S. ராஜமணி, Rev.D.மோகன், Rev.A.ஆபிரகாம் தாமஸ்**

பிரதேச தலைவர்கள் மற்றும் மண்டல தலைமை போதகர்கள்

Contact : Rev. I. Christudas, Director, Department of Evangelism & Church Planting
Hope A.G. Church, No.1, Dr. Radhakrishnan St., Pallikaranai, Chennai - 100. Cell: 98412 98009

# A.G. தமிழ்நாடு வேதாகமக் கல்லூரி

(An ATA Accredited College)

மதுரை – 625 016

Email : agtbc1948madurai@gmail.com Website : www.agtbc.org

**1. Master of Divinity** (M.Div.) Regular

**Medium** : English | **Duration** : 3 Years

**Eligibility :** Recognized University Degree (10+2+3)

**2. Master of Divinity (M.Div.)** Extension

(For Men and Women) **Medium** : English | **Duration** : 3 Years,

**Eligibility** : Standard Entry: Recognized University Degree (10+2+3)

Upgrade : B.Th., or its equivalent.

**3. Bachelor of Theology** (B.Th.)

**Medium** : English and Tamil | **Duration** : 3 Years

**Eligibility** : +2 Pass

**4. Diploma in Theology (Dip. Th.)**

**Medium** : Tamil | **Duration** : 2 Years

**Eligibility** : S.S.L.C. (X Std Pass)

**5. Bachelor of Theology (B.Th.)**

(Upgrading Programme only for A.G. Pastors)

**Medium** : Tamil

**Duration** : 1 Year For Residential Graduates 3 Years Dip.Th + 3 Years Experience of Church Ministry

For Extension Graduates 2 Years Dip.Th + 10 Years Experience of Church Ministry

**Duration** : 2 Years (For AGTBC Extension Dip.Th Holders) + 3 Years Experience of Church Ministry

**6. Diploma in Theology (Dip. Th.)**

(Through AGTBC Extension Studies)

**Medium** : Tamil | **Duration** : 2 Years | **Eligibility** : S.S.L.C. (X Std Pass)

---

**விண்ணப்ப படிவத்திற்கு**

**Download Application Form : www.agtbc.org**

---

தொடர்பு:

*Director of Residential Studies*

**AG Tamilnadu Bible College**

Post Box-1, Bye Pass Road, Madurai - 625 016

Cell : 96982 55027, 94430 70974, Ph: 0452 2601940.



# எந்தக் காரியம்?


**Rev. Dr. L. ஜெயபாலன்**

உபதலைவர், தமிழ் பிரதேச ஏ.ஜி. நிர்வாகக்குழு


**''தாவீது செய்த இந்தக் காரியம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்தது''** (2 சாமுவேல் 11:27)

மேல்நாட்டில் அமைச்சர் (மந்திரி) ஒருவர், குடும்பஸ்தர், வேறொரு பெண்ணுடன் உறவு வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. நாளிதழ்களில் பிரசுரிக்கப்பட்டது. அவரது குடும்பத்தில் ஒரே குழப்பம். வேதனை. மனைவிக்குத் தாங்கொண்ணாத் துயரம். தான் முறைகேடாக நடந்தது தவறு என்பதை உணர்ந்த அந்த அமைச்சர்(மந்திரி) பின்வருமாறு அவர் அறிக்கை செய்தார்."நான் கடவுளுக்கு விரோதமாக, எனது மனைவி பிள்ளைகளுக்கு விரோதமாக, உறவினர்கள், நண்பர்கள், எனது தேசத்திற்கு விரோதமாக பாவம் செய்தேன்" என்று நாளிதழில் வெளியானது.

நாம் இருக்கும் காலம், பாவமானது அல்லது இச்சையானது சிறுவயது முதற்கொண்டு வயோதிபர் வரை, அவர்களை வசீகரித்து தவறான பாதைக்கு நடத்திச் செல்லக் கூடியதாக இருக்கிறது . சிறுமியிடம் தவறாக ஒரு வாலிபன் நடந்து கொண்டான். பிள்ளையின் கதறுதல் கேட்ட அக்கம் பக்கத்தார் அவனுக்கு தர்ம அடி கொடுத்து காவல் துறையிடம் ஒப்படைத்தனர். பள்ளி ஆசிரியர், மாணவியிடம் குறும்பு செய்ததால் வேலையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார் என்றெல்லாம் வாசிக்கிறோம். 60 வருடங்களுக்கு முன் வெளிவந்த படங்கள், அறநெறி, வரலாறு போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. குடும்பத்துடன் பார்க்கமுடிந்தது. அழுகையுடன் பெண்கள் வருவதை காண முடிந்தது. இன்று படம் பார்ப்பவர்கள், அரிவாளாலால் வெட்டினார், ஆளை கடத்திச் சென்றார் என்று வாசிக்கிறோம்.

எப்பேர்பட்ட மனிதனும் தவறு செய்ய முடியும் என்பதை பைபிள் ஆணித்தரமாகக் கூறுகிறது. தாவீது இளம்வயதிலேயே, கடவுளின் இதயத்திற்கு ஏற்ற மனிதனாக நடந்து கொண்டான். கோலியாத்தை ஒரு கல்லால் கொன்றவன் கண்களின் இச்சைக்கு இடங்கொடுத்து, ஒரு போர் வீரனின் மனைவியுடன் தகாத விதமாய் நடந்து கொண்டான். அவனுடைய சேவகர்கள் யுத்தம் செய்கையில் ஆலயத்தில் சென்று அவர்களுக்காக ஜெபிக்காமல், பாவத்தில் விழுந்தான். அவன் கீழ்க்கண்ட காரியங்களைச் செய்தான்.

❖ பிறனுடைய மனைவியிடம் தகாத விதமாய் நடந்து அவள் கர்ப்பம் அடையும்படி செய்தான்.

❖ பாவத்தை மறைக்க அவளது கணவனை அழைத்து, வீட்டிற்கு அனுப்ப முயற்சி செய்தான். அதற்கு இணங்க உத்தமனான உரியா மறுத்து விட்டான் (2சாமு. 11: 11).

❖ பெயர் கெட்டுப் போகாமல் இருக்க உரியாவை சாகடிக்க யோவாபுக்கு நிருபம் எழுதி, அவன் எதிரிகளால் கொல்லப்படுவதற்கு தாவீது சதி செய்தான். 2சாமு. 11:14-17 என்ன பரிதாபம்.

❖ பின்னர் பகீரங்கமாக உரியாவின் மனைவியை தன்னிடம் வைத்துக் கொண்டான் (2சாமு. 11:27).

❖ கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். கர்த்தரையும் அவருடைய வார்த்தையையும் அசட்டை பண்ணினான் (2சாமு. 12:10)

❖ கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க தாவீது காரணமாயிருந்தான். "ஆனாலும் இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால்" 2சாமு. 12:14. கர்த்தருக்கும் சத்துருக்கள் உள்ளனர்.

இந்த சம்பவம் 3000 வருடங்களுக்கு முன் நடந்த ஒரு காரியம். எச்சரிப்பாக அநேக காரியங்கள் 2சாமுவேல் நூலில் இடம் பெறுகின்றன. தேவன் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி தாவீதின் பாவத்தை உணரச் செய்தார்.

**இதனிமித்தம் தாவீது பல இன்னல்களைச் சந்தித்தான்**

❖ . "ஏழாம் நாளில் பிள்ளை செத்துப்போயிற்று". 2சாமு.12:18. பத்சேபாளுக்குப் பிறந்த (Unnamed Child) பிள்ளை இறந்து போனது.

❖ அம்னோன் (Amnon), அப்சலோமின் சேவகரால் கொல்லப்பட்டான். (2சாமு 13:29).

❖ அதோனியா (Adonia) சாலமோனின் கட்டளையால் கொல்லப்பட்டான். 1 இரா. 2:25 அரச பதவியை தந்திரமாகப் பறிக்க முயற்சித்த அதோனியா சொந்த சகோதரனால் கொல்லப்பட்டான்.

❖ அப்சலோம் தாவீதின் விருப்பமான மகன், தாவீதின் மனைவிகளிடம் முறைகேடாக நடந்தவன். பதவிக்காக தகப்பனையே கொல்ல சேவகரை அனுப்பியவன், மரத்தில் தொங்கி, சேவகரால் கொல்லப்பட்டான். (2சாமு.16:22, 18:15).

நம்மை உண்டு பண்ணிய கடவுள் பரிசுத்தர். அவர் நம்மை பரிசுத்தராக இருக்கத் தெரிந்து கொண்டார். "நான் பரிசுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்". "உனது பரிசுத்தத்தின்படியே உனது வெற்றியும் இருக்கும்" என்கிறார் ஒருவர். "ஒரு பரிசுத்தவான் கர்த்தர் கையிலுள்ள ஒரு பெரிய ஆயுதம்" என்கிறார் இன்னொருவர்.

ஆதாமுக்கு ஏற்றத் துணையை ஏற்படுத்தியவர் தேவனே! (ஆதி. 2:12). மனைவி ஒரு மனிதனுக்கு கடவுள் கொடுக்கும் பஞ்சு மெத்தை. இதை விட்டுவிட்டு பாதாளச் சாக்கடையில் விழுந்து விடக்கூடாது. "அவர் ஒருவனையல்லவா படைத்தார்! ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே பின்னே ஏன் ஒருவனைப் படைத்தார். தேவ பக்தியுள்ள சந்ததியைப் பெறும் படிதானே. ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (மல். 2:15).

பார்வோன், சாராளை தனது அரண்மனைக்கு அழைத்துக் கொண்டதால் "ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராயின் நிமித்தம் கர்த்தர் பார்வோனையும் அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதித்தார்" (ஆதி.12:17). பாவம் வாதைகளுக்கு காரணமாக இருக்கிறது. அபிமேலேக்கு, சாராளை விரும்பி, அவளை தன்னிடம் கொண்டுவந்த பொழுது கடவுள் சொப்பனத்தில் அவனை எச்சரித்தார். "நீ அழைப்பித்த ஸ்திரீயினிமித்தம் நீ செத்தாய். அவள் ஒருவனுடைய மனைவியாயிருக்கிறாளே! என்றார்... நீ எனக்கு விரோதமாக பாவம் செய்யாதபடிக்கு உன்னைத் தடுத்தேன்" (ஆதி. 20:3,6) "அபிமேலேக்கின் வீட்டாரின்

கர்ப்பங்கள் அடைக்கப்பட்டன" என பைபிள் கூறுகிறது (ஆதி.20:17). பாவம் அநேக குடும்ப ஆசீர்வாதங்களைத் தடுக்கும்.

## சோதனைகளை மேற்கொள்ளும் வழிகள் :

"கடவுளுடைய வார்த்தைகளை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். "உமக்கு விரோதமாக பாவம் செய்யாதபடி உமது வசனத்தை எனது இருதயத்தில் பதித்து வைத்தேன்" என்கிறார் சங்கீதக்காரன்.

❖ **எண்ணங்களை சிறைப்படுத்துங்கள்** (Captivate)

"எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்கே கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிற வர்களாயிருக்கிறோம்" என்கிறார் பவுல் (II கொரி.10:5).

❖ **சிலுவையிலறையுங்கள்** (Crucify)

மனதில் வரும் தவறான எண்ணங்களை எதிர்க்க வேண்டும். "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" (கலா. 5:24).

❖ **சீர்ப்படுத்துங்கள்** (Cultivate)

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது. "கடைசியாக சகோதரரே உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவை களெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்" (பிலி. 4:8).

இதை வாசிக்கின்ற நீங்கள் எவ்வித சோதனைகளால் வாதிக்கப்படு கிறீர்களோ என்பது எனக்குத் தெரியாது. உங்களில் இருக்கின்ற பரிசுத்தாவியானவர், வசனத்தின் மூலம் சோதனைகளை எதிர்த்து வெற்றியடைய அருள்புரிவாராக.

பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற வாஞ்சையுள்ளவர்கள் 91-94434 74921 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளவும்.

---

**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம்**

குறிப்பு:- காசோலை / டிராப்ட் எடுக்கும்போது
**Tamil District Council of SIAG** என்று எடுக்கவும்.
அனுப்பும்போது பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்பதை குறிப்பிடவும்.

மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும்.
பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள்

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**
**30, நாவலர் நகர், மதுரை - 625 016. போன் : 0452 2301165.**
**என்ற முகவரிக்கு அனுப்பவும்**

- ஆசிரியர்



# தேர்வில் வெற்றி

Rev. R. நெல்சன் ஞானகுமார்
இயக்குநர் - கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்



## தேர்வின்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரியங்கள்

**தேர்வு எழுத ஆரம்பிக்கும் முன் கவனத்தில் கொள்ள வேண்டியவைகள்:**

1. தேர்வுக்குப் புறப்படுமுன் தேவையற்ற "டென்ஷன்" இருக்கக்கூடாது.
2. தேர்வுக்குத் தேவையான பொருட்களை முன்னதாகவே பட்டியலிட்டு எடுத்துவைக்க வேண்டும். இதோ சில....ஹால் டிக்கட், நன்கு எழுதக்கூடிய இரு பேனாக்கள். ஸ்கெச் பேனாக்கள், பென்சில், ரப்பர், ஸ்கேல், ஜியாமெட்ரி பாக்ஸ்.
3. தேர்வு துவங்குவதற்கு குறைந்த பட்சம் அரை மணி நேரத்திற்கு முன்பே தேர்வு மையத்தைச் சென்றடைய வேண்டும். 15 நிமிடத்திற்கு முன் இருக்கையில் சென்று ஜெபத்துடன் அமைதியாக அமரவேண்டும்.
4. தேர்வு ஆரம்பமாக உள்ள ஒரு சில நிமிடங்களுக்கு முன் புதிதாக எதையும் படித்துக் குழப்பிக் கொள்ளக்கூடாது.
5. வினாத்தாள் தரப்படுவதற்கு முன் விடைத்தாளில் பதிவு எண், பக்க எண்கள் போன்ற விபரங்களை நிதானத்துடன் நிரப்ப வேண்டும். பெயர் எழுதக்கூடாது.
6. முதல் சில நிமிடங்களில் கேள்வித்தாள் முழுவதையும் கவனமாக வாசிக்க வேண்டும்.

**தேர்வு எழுதும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவைகள்**

1. மிக நன்றாகத் தெரிந்த கேள்விகளை குறித்து, அவற்றிற்குரிய பதில்களை முதலாவது எழுத வேண்டும். கேள்வி எண்களை எழுதின பிற்பாடு பதில் எழுத ஆரம்பியுங்கள்.
2. மதிப்பெண்களுக்கு ஏற்ப கேள்விகள் எழுத நேரத்தை ஒதுக்க வேண்டும். 10 மதிப்பெண்களுக்கு உரிய கேள்விக்கு 1 மணி நேரம் பதில் எழுதக்கூடாது.
3. நேரத்தைக் கவனித்து சுறுசுறுப்பாக செயல்பட கைக்கடிகாரம் பயன்படும்.
4. ஒரு பக்கத்திற்கு 25 வரிகள் எழுதினால் போதும். கையெழுத்து தெளிவாக இருத்தல் அவசியம். அடித்தல் திருத்தல் தவிர்க்கப்பட வேண்டும். Margin விட்டு எழுத வேண்டும்.
5. ஒவ்வொரு கேள்வி முடிந்ததும் ஸ்கேல் வைத்து கோடு போடுங்கள். வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்ற சொற்றொடர்களை சிவப்பு, பச்சை தவிர பிற ஸ்கெச் பேனாவால் அடிக்கோடிடுங்கள்.
6. மொத்த மதிப்பெண்கள் 100 என்றால் அதற்குரிய அத்தனை கேள்விகளுக்கும் பதில் எழுதுங்கள். எந்தக் கேள்விகளையும் விட்டுவிடக்கூடாது.
7. இடையில் தண்ணீர் அருந்துங்கள். புத்துணர்ச்சியுடன் பரீட்சை எழுதுவது அவசியம்.
8. தேர்வு நேரம் முழுவதையும் பயன்படுத்துங்கள். விரைவில் எழுதிவிட்டு வெளியே வர முயற்சிக்காதீர்கள்.
9. இறுதி 10 நிமிடத்தில் வினா எழுதுவதை நிறுத்தி, பக்கங்களை கிரமமாக அடுக்கி

கேள்வி எண்களை கவனமாக சரிபார்த்து, கவலையீனப் பிழைகளைத் திருத்தி, நூலினால் தாள்களை இணைத்துக்கட்ட வேண்டும்.

## தேர்வு பயத்தை மேற்கொள்வது எப்படி?

எது நடக்கக் கூடாதோ அதை சிந்திப்பதே பயம் ஆகும். எது நடக்க வேண்டுமோ அதை சிந்திப்பதே விசுவாசமாகும். தேர்வு பயத்தை மேற்கொள்ள கீழ்க்கண்ட ஆலோசனைகளை கவனமாக வாசியுங்கள்.

### ❖ கடைசி நேர படிப்பு

பரீட்சை ஆரம்பிக்கும் கடைசி நிமிட நேரம் வரை படித்தல் பயத்தை உருவாக்கும். கடைசி நேரத்தில் புதிதாக எதையும் படித்து குழப்பிக் கொள்ளாதீர்கள். சிறிது நேரம் மனது ரிலாக்ஸாக இருக்கட்டும். பரீட்சை எழுதுவதற்காக வீட்டிலிருந்து கிளம்பும் போதே, பாடப்புத்தகங்கள் எல்லாம் வீட்டில் வைத்துவிட்டுப் போனால் நல்லது. புதிதாய் ஏதாவது படித்தால், ஏற்கனவே படித்தது மறந்து போய்விட வாய்ப்பு இருக்கிறது.

### ❖ கடைசி நேர வதந்தி

கடைசி நேரத்தில் யாராவது வரப்போகிற வினாத்தாளைக் குறித்த வதந்தியை பரப்பினால் அதனிமித்தம் குழப்பம் அடையாதிருங்கள். அது அநேக நேரங்களில் பொய்யானதாக போய்விடுகிறது. இந்த கேள்வி தான் வருகிறது என்று யாராவது சொன்னால் பதட்டம் அடையாதிருங்கள், நீங்கள் என்ன படித்திருக்கிறீர்களோ அதை நன்றாக எழுதுங்கள் போதும். நல்ல மதிப்பெண் வாங்கலாம்.

### ❖ படிக்காத பாடங்களைக் குறித்த சிந்தனை

படிக்காத பகுதியிலிருந்து கேள்வி வந்தால் என்ன செய்வது? என்று யோசித்து கடைசி நேரத்தில் படிக்காத புதிய பாடங்களை படிக்க ஆரம்பிப்பீர்கள். அது ஒன்றும் புரியாது. எளிதில் மனனம் செய்வதும் இயலாது. கடைசியில் படித்திருக்கிற பாடங்களில் குழப்பம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. எனவே படிக்காத பாடங்களைக் குறித்த கவலை படித்த பாடங்களைத் திருடி விடாதபடி கவனமாயிருங்கள். நீங்கள் படித்த பாடங்களையே நன்றாக படித்துவிட்டுப் போங்கள். படித்ததிலிருந்து வரும் கேள்விகளுக்கு சிறந்த முறையில் பதில் எழுதுங்கள். அதுவே சிறந்த மதிப்பெண் பெற போதுமானது.

### ❖ தேவையில்லாத யூகங்கள்

படித்ததெல்லாம் வருமா? படித்ததெல்லாம் நினைவுக்கு வருமா? திருத்துகிறவர் சரியான மதிப்பெண் போடுவாரா? போன்ற தேவையற்ற கேள்விகளை நீங்களே கேட்டுக்கொண்டு, சிந்தித்து மனதை குழப்பிக்கொண்டிராதிருங்கள். “மனிதன் விருதாவாகவே சஞ்சலப்படுகிறான்”.

### ❖ குறுக்கு வழியை நாடாதிருங்கள் :

பிட் வைத்திருந்தால் தேவையில்லாத டென்ஷன் வரும். மட்டுமல்ல ஒரு முறை பிட் அடித்து பழகிவிட்டால். அடுத்து படிக்கும்போது இதையும் பிட் எழுதிடலாம் என்ற சிந்தனைதான் வருமே தவிர, படிக்க மனமிருக்காது. எனவே பூஜ்யம் மதிப்பெண் வாங்கினாலும் பரவாயில்லை, பிட் அடிப்பதில்லை என்பதை தீர்மானியுங்கள்.

“நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன், நான் உன்னைப் பலப்படுத்தி உனக்கு சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னை தாங்குவேன்” (ஏசாயா 41:10).



# இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் ஆசீர்வாதங்கள்



1. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்கு மீட்பும் பாவ மன்னிப்பும் கிடைக்கிறது (1 பேதுரு 1:18,19; கொலோ. 1:14; எபே. 1:7; எபி. 9:12).
2. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனுக்கு சமீபமாகிறோம் (எபே. 2:11-13).
3. இயேசுவின் இரத்தம் நம்மை பாவங்களற கழுவி சுத்திகரிக்கிறது (வெளி.1:5; 1 யோவான் 1:7).
4. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனுக்கு முன்பாக இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கப்படுகிறோம் (வெளி. 1:5).
5. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்கு சமாதானம் உண்டாகிறது (கொலோ. 1:20)
6. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் சாத்தானை ஜெயிக்கிறோம் (வெளி. 12:11).
7. இயேசுவின் இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு நம்முடைய மனச்சாட்சியை செத்த கிரியைகளற சுத்திகரிக்கிறது (எபி. 9:14).
8. இயேசுவின் இரத்தம் தேவனுடைய பரிசுத்த சந்நிதிக்குள் பிரவேசிப்பதற்கு நமக்கு தைரியத்தை கொடுக்கிறது (எபி. 10:19,20).
9. இயேசுவின் நித்திய உடன்படிக்கையின் இரத்தம் நம்மை சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குகிறது (எபி. 13:20,21).
10. இயேசுவின் இரத்தம் நம்மை நீதிமான்களாக மாற்றி, தேவனுடைய கோபாக்கினைக்கு நீக்கி நம்மை இரட்சிக்கிறது (ரோமர் 5:9).

---

## AGTBC-யின் 70 வது ஆண்டு கொண்டாட்டம்

தேவ கிருபையால் AG தமிழ்நாடு வேதாகமக் கல்லூரியின் 70-வது ஆண்டு கொண்டாட்டம் 2018 ஜனவரி 15-ம் தேதி காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை நமது கல்லூரி வளாகத்தில் வைத்து **"மனமகிழ்வோம் முன்செல்வோம்"** என்ற தலைப்பில் சிறப்பாக, ஆசீர்வாதமாக நடைபெற்றது. பாடல் துதி ஆராதனையை **Rev.சார்லஸ் விக்டர்** அவர்கள் வேதாகமக் கல்லூரியின் பாடல் குழுவுடன் சேர்ந்து நடத்தினது ஆசீர்வாதமாக இருந்தது. சிறப்பு செய்தியாளரை கல்லூரியின் முதல்வர் **Rev.Dr.T.S.ராஜசேகர்** அவர்கள் அறிமுகப்படுத்த, **Rev.A.ஆபிரகாம் தாமஸ்** அவர்கள் கொடுத்த தேவ செய்தி ஆசீர்வாதமாக இருந்தது.

கல்லூரியின் முன்னாள் மற்றும் இந்நாள் முதல்வர்கள், முன்னாள் இந்நாள் ஆசிரியர்கள், மூத்த பயின்றோர்கள் அனைவருக்கும் நினைவு பரிசு கொடுத்து பாராட்டப்பட்டது. மேலும் கல்லூரிக்கு மாதந்தோறும் பண உதவி செய்யும் சபை போதகர்கள் கல்லூரியின் சார்பாக சான்றிதழ் கொடுத்து பாராட்டப்பட்டார்கள். கல்லூரியின் சரித்திரத்தையும், அரிய புகைப்படங்களையும் உள்ளடங்கிய விழாமலர் **"நினைவலைகள்"** வெளியிடப்பட்டது. விழாமலர் வெளிவர **Rev. ராபின்சன்** அவர்கள் சிறப்பாக பணியாற்றினார்கள்.

பிரதேசத்தலைவர் **Rev.ஸ்டீவ் ஜெயராஜ்** அவர்கள் கல்லூரியின் 70-வது வருடத்தை நினைவு கூரும் அடையாளக் கொடியை சிற்றாலயத்தின் முன் ஏற்றி பின்னர் தேவ செய்தியை கொடுத்தார்கள். பயின்றோர் கூட்டமைப்பின் தலைவர் **Rev.J.சாமுவேல் ஜெபராஜ்** அவர்கள் சிறப்பாக நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். இதில் பிரதேச நிர்வாகக்குழுவினர், மூத்த போதகர்கள், பிராந்திய மேற்பார்வையாளர்கள், மண்டலத் தலைமைப் போதகர்கள் உட்பட சுமார் 700 பேர் வந்திருந்தார்கள் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஆசீர்வாதமாயிருந்தது தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

# THE CROSS OF JESUS CHRIST

At the cross man did his worse, but God did his best. The cross is the central theme of the Bible. It is to the Bible what my heart is to me. It is to the Bible what an engine is to a car. The Cross is why Jesus Came (Matthew 20:28; Luke 19:10; I Timothy 1:15). The Cross is for everyone (I John 2:2;John 3:16; Romans 10:13; 2 Peter 3:9; Isaiah 45:22).

## I. The CAUSE of the Cross

The Predicament of Man
Romans 3:23; Romans 5:12

The Penalty of sin
Ezekiel 18:20; Romans 6:23.

The Providence of God
Acts 2:22-23

## II. The CRUELTY of the Cross

Jesus was Shackled - John 18:12

He was Sentenced - Mark 14:63-64

He was Stripped - Matthew 27:28

He was Scourged – John 19:1

He was Smitten - John 19:3

He was Spit upon - Matthew 27:30

He was Slain
– Luke 18:33; Mark 15:37

## III. The CRIES from the Cross

A Forgiving cry - Luke 23:34
A Favouring cry - Luke 23:40-43
A Family cry - John 19:25-26
A Forsaking cry - Matthew 27:46
A Fervent cry - John 19:28
A Finishing cry - John 19:30
A Farewell cry - Luke 23:46

## IV. The CONQUEST of the Cross

Victory over Sin
(Eph.1:7; 1 Pet. 2:24)

Victory over Sickness
(Matt. 8:17; Is. 53:5)

Victory over Sorrow (Isaiah 53:4)

Victory over Scourge (curses)
(Gal. 3:13,14)

Victory over Satan (Col. 2:15)

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால், உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

ஆசிரியர்



# நீதிமானாகிய யோபு

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**
All India National Director, Global University

ஒரு நல்ல மனிதனுக்கு ஏற்பட்ட துன்பப்பெருக்கான சோதனைகளில் மனிதர்கள் அவனையும் அவன் சூழ்நிலைகளையும் புரிந்துகொள்ளாத நிலை. தேவன் அவனுக்குத் தந்த மறுவாழ்வு ஆகிய இப்புத்தகத்தின் சம்பவங்கள் நமக்குக் கற்றுத்தருவது என்ன? பாடுகள் நிறைந்த உலகத்தில் தேவன் சர்வ வல்லமையும், அனந்த ஞானமும். எங்கும் நிறைந்திருக்கிறவருமாயிருந்து நன்மை செய்கிறவராகவும் நீதியுள்ளவராகவும் இருக்கிறார். இதுவே யோபு புத்தகம் தரும் செய்தி.

பழைய ஏற்பாட்டில் எசேக்கியேல் 14:14-20 வசனங்கள் யோபுவை நீதிமானாகக் குறிப்பிடுகின்றன. புதிய ஏற்பாட்டில் யாக்கோபு நிருபம் 5:11 பொறுமைக்கு இலக்கணமாக யோபுவைச் சித்தரிக்கிறது. இவ்விரண்டு வேத பகுதிகளும், யோபு ஒரு சரித்திர புருஷன் என்றும் நமக்குச் சொல்லுகின்றன. மேலும் யோபு ஆபிரகாம் வாழ்ந்த கோத்திர பிதாக்களின் காலத்தைச் சார்ந்தவன் என கணிக்கலாம்.

## யோபுவின் சரித்திரம்

**யோபு தேவ பக்தியுள்ள செல்வந்தன் :** இன்று மத்திய கிழக்கு எனப்படும் பகுதியில் வாழ்ந்து வந்தான் யோபு (1:1). அவன் வாழ்ந்த இடம் ஊத்ஸ் தேசம் என வேதம் கூறுகிறது. யெகோவா கர்த்தருக்கு பயந்து வாழ்ந்த அவன் மிகப்பெரிய செல்வந்தன் தனது மனைவியுடன் ஏழு ஆண் பிள்ளைகளும், மூன்று பெண் பிள்ளைகளும் அவனுக்கிருந்தார்கள்(1:2).யோபு வாழ்ந்த காலத்தில் ஒருவனுக்கிருந்த நிலபுலன்களும், மிருக ஜீவன்களும், வேலைக்காரரும் அவனது செல்வங்களாகக் கணிக்கப்பட்டன. அத்தகைய செல்வங்களுடைய சீமானாயிருந்தான் (1:3). என் கால்களை நெய்யினால் கழுவினேன் என்னுமளவிற்கு திரளான செல்வம் அவனுக்கு உண்டாயிருந்தது (1:3;29:6) செல்வந்தனாயிருந்த யோபு, உத்தமன் என்றும் தேவனுக்குப் பயந்துப் பொல்லாப்புக்கு விலகுகிறவன் என்றும் அறிமுகப்படுத்துகிறான் (1:1).

**யோபு ஒரு நீதிமான்:** தேவனோடுள்ள உறவில் அவரை ஆராதித்தான் (1:5) எந்த இழப்பிலும் கர்த்தரைத் துதித்தான் (1:21) பாடுகளின் காலத்தில் வாயினால் பாவம் செய்யவில்லை (1:22) உத்தமத்தில் உறுதியாயிருந்தான் (2:9;13:15;23:10) மேசியாவின் வருகையை எதிர்நோக்கியிருந்தான் (19:25). பொறுமைக்கு இலக்கணமாய் திகழ்ந்தான் (யாக்.5:11) நீதிமான் என்று சரித்திரத்தில் பொறிக்கப்பட்டான் (எசே. 14 : 14,20) தனது திரளான செல்வத்தை தேவனே தனக்குத் தந்தார் என்பதை எப்போதும் நினைவுக்கூர்ந்தான் (1:21; 29:2).

**யோபு தனது குடும்ப வாழ்க்கையில் உத்தமனாயிருந்தான்:** 'தேவனை தூஷித்து ஜீவனை விடும்' என்ற தனது மனைவியையும் ''பயித்தியக்காரி'' என கடித்துக்கொள்ள துணியாத யோபுவை எத்தனை உத்தமனாக இங்கு காண்கிறோம்! (2:10) தன் பிள்ளைகளுக்கு நல்ல தகப்பனாயிருந்து. அவர்கள் கர்த்தரைப் பற்றிய பயத்தில் வளர உதவினான் (1:4.5).

**சமூக வாழ்க்கையில் யோபு உன்னத மாதிரி வாழ்க்கை வாழ்ந்தான்:** கர்த்தர் தந்தவற்றில் தயாளனாயிருந்து பிறருக்கும் கொடுத்து உதவி செய்து வாழ்ந்தான். (4:1-4) இளைத்தவனைத் திடப்படுத்தினான், விழுகிறவனை தன்னுடைய வார்த்தைகளால் நிற்கப்பண்ணினான், தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்தினான் (29.12-17) முறையிடுகிற ஏழையையும், திக்கற்றப் பிள்ளையையும், உதவியற்றவனையும் இரட்சித்தான் விதவையின் இருதயத்தை கெம்பிரிக்க செய்தான். குருடனுக்குக் கண்ணாயிருந்தான். சப்பாணிக்கு காலாயிருந்தான், எளியவர்களுக்கு தகப்பன் போல உதவினான். நியாயம் கிடைக்காதவர்களுக்கு நியாயமான தீர்ப்புச் செய்தான் (31:16-32).

## யோபுவுக்கு வந்த 5 சோதனைகள்

**1. அவன் செல்வங்கள் அழிந்தன:** ஆடுகள், ஒட்டகங்கள், எருதுகள், கழுதைகள் ஆகியவற்றை சபையோர், கல்தேயர் என்னும் கொள்ளையர் வந்து கொண்டு சென்றனர். மிருக ஜீவன்கள் மேல் மின்னல் விழுந்து அவை அழிந்தன.

**2. அவனுடைய பிள்ளைகள் செத்தார்கள்:** பெருங்காற்று வீட்டில் மோதி அடிக்க பிள்ளைகள் செத்தார்கள். ஒரே நாளில் ஒரே வீட்டில் பத்து பிள்ளைகளும் பறிக்கப்பட்டார்கள். இவர்கள் துன்மார்க்கமாய் வாழ்ந்த பிள்ளைகள் அல்ல ஒருவரோடொருவர் அன்புடனிருந்து தாய் தகப்பனுக்கு கீழ்படிந்திருந்தனர் செல்வங்கள் அழிந்தாலும் பிள்ளைகளிருப்பின் அனைத்தையும் திரும்பச் சம்பாதித்துக்கொள்ளலாம் என்னும் நம்பிக்கையும் யோபுவுக்கு இப்போது இல்லாமற்போயிற்று.

**3. யோபுவின் சொந்த ஆரோக்கியம் கெட்டது:** கொடிய பருக்களால் வாதிக்கப்பட்டான். ஒரு ஓட்டை எடுத்துத் தன்னைச் சுரண்டிக்கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான். (2:5) இந்தப் பருக்கள் யானைக்கால் வியாதிக்கு சமமான புண்கள் என நம்பப்படுகிறது. அதிலிருந்து சீழ் வடியும்போது கொடிய துர்நாற்றம் வீசும். வடியும் சீழை ஓட்டினால் சுரண்டி எடுக்கிறான். அழுது அழுது அவன் முகம் அழுக்கடைகிறது (16:16) சரீரத்துக்குள்ளும் புண்கள் இருப்பதால் அவனது சுவாசம் துர்நாற்றம் வீசுகிறது. (19:17) வியாதியினால் மிகவும் மெலிந்துபோனான். எலும்பும் தோலுமாக மாறினான் (20:20) வியாதி வந்ததும் அவனது சொந்தக்காரரெல்லாரும், அண்டை அயலாரும், அறிமுகமானோரும் அவனைவிட்டு விலகிச் சென்றனர் (19:13,14),

**4. யோபு தனது மனைவியின் அன்பை இழந்தான் :** நமது பெருந்துன்ப நேரங்களில், நமக்கு மிகவும் அருமையானவர்களை நமக்கு எதிராய் தூண்டிவிட்டு, நமது விசுவாசத்திலிருந்தும் தேவன்மேலுள்ள நம் அன்பிலிருந்தும் நம்மைப் பிரிக்க சாத்தான் முயலுவான். யோபுவின் மனைவி இதற்கு நல்லதொரு உதாரணம். எல்லாவற்றையும், எல்லாரையும் இழந்த யோபுவுக்கு இப்போது இருப்பதெல்லாம் அவனது மனைவி மட்டுமே. அவளும் வெறுத்தாள். "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும்" என்று கூறுகிறாள். ஆனால் உத்தமனும், சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய யோபு சாத்தானின் தூண்டுதலினால் வாய்திறந்த தனது மனைவியின் சொல்லுக்கு இணங்கவில்லை. எந்தவொரு மனைவியும் தனது கணவன் செல்லும் கடினப் பாதையில் அவனுக்கு ஆதரவாய், ஆறுதலாய் இருக்க வேண்டும். ஆனால் இவளோ, அவனுக்கு அதிகம் தேவைப்பட்ட இக்கட்டுக் காலத்தில் யோபுவைக் கைவிட்டாள் அந்தோ பரிதாபம்!

**5. யோபு தன் நண்பர்களின் அன்பை இழந்தான் :** எலிப்பாஸ், பில்தாத், சோப்பார்,

எலிகூ என்ற நான்கு நண்பர்கள் யோபுவுக்கு ஆறுதல் சொல்ல வருகிறார்கள். இவர்கள் அக்கால உலகம் அறிந்த அன்றைய இறையியல் வல்லுநர், தத்துவ மேதைகள், யோபுவின் பாடுகளைக் கேள்விப்பட்டு தம்தம் இடங்களிலிருந்து புறப்பட்டு வந்தனர். யோபுவுக்காக பரிதபிக்கவும், அவனுக்கு ஆறுதல் சொல்லவும் ஒருவேராடொருவர் யோசனைப் பண்ணிக்கொண்டு அவரவர் தங்கள் ஸ்தலங்களிலிருந்து வந்தார்கள் (2:11).

யோபுவுக்கு மிகவும் நெருக்கமான நண்பர்களாக இருந்தனர். அவர்கள் தூரத்தில் வருகையில், தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, அவனை உருத்தெரியாமல் தங்கள் சால்வையைக் கிழித்து வானத்தைப் பார்த்து தங்கள் தங்கள் தலைகள் மேல் புழுதியைத் தூற்றிக்கொண்டு வந்து, அவன் துக்கம் மகா கொடிய துக்கம் என்று கண்டு. ஒருவரும் அவனோடு ஒரு வார்த்தையும் பேசாமல், இரவு பகல் ஏழுநாள், அவனோடு கூடத் தரையிலே உட்கார்ந்திருந்தார்கள்.

இப்படிப்பட்ட நெருக்கமான நண்பர்கள் தங்கள் வாய் திறந்து பேச ஆரம்பித்தபோது அவர்கள் வார்த்தைகள் ஆறுதல்படுத்துவதற்குப் பதிலாக விவாத வார்த்தைகளாயும், விமர்சன வார்த்தைகளாயும் வெளிவந்தன. யோபுவின் நண்பர்கள் கிட்டத்தட்ட ஓராண்டுக்காலம் அவன் வீட்டில் தங்கி, அவன் உணவை அருந்தி, அவனை வசைப்பாடி விவாதத்தில் வெற்றிப்பெற முயன்றனர். யோபு தன்னை நீதிமானாக சாதித்தான். நண்பர்கள் அவனை பாவியாகத் தீர்த்தனர். முடிவு ஒன்றும் எட்டாத நிலையில் தேவன் தாமே இறங்கி வந்து பிரச்சனைக்கு முடிவுக்கொண்டு வந்தார்.

**தேவன் இறங்கி வருதலும், யோபுவின் மறுவாழ்வும் :**

யோபு புத்தகத்தில் 225 கேள்விகள் வருகின்றன. 38 முதல் 42 வரையுள்ள அதிகாரங்களில் தேவன் கேட்கும் கேள்விகளாக 77 கேள்விகள் தரப்பட்டுள்ளன. எனது சிருஷ்டிப்பின் மகத்துவத்தை நீ விவரிக்க இயலுமா? எனது சிருஷ்டிப்பை மேற்பார்வையிட்டு பராமரிக்க உன்னால் முடியுமா? என் சிருஷ்டிகளை கீழ்ப்படுத்தி ஆள உன்னால் ஆகுமோ? என்பவைதான் தேவன் யோபுவிடம் கேட்ட கேள்விகளின் சாராம்சம். யோபுவின் கேள்விகளெல்லாம் தேவனுடைய கேள்விகளுக்கு முன்பாக அர்த்தமற்றவையாகிவிடுகின்றன. எனவே யோபு மனஸ்தாபப்பட்டு அமைதியாகிவிடுகிறான். யோபுவின் கேள்விகளுக்கு விளக்கம் தேவைப்படவில்லை. தேவனுடைய தரிசனமும், வெளிப்பாடுகளும் மட்டுமே போதுமானவைகளாகவும், அவனது பாடுகளுக்கு முடிவாகவும் அமைந்தன. நாம் அமைதியாயிருக்கும் போதுதான் தேவன் நமக்காக வைத்திருக்கும் மிகப்பெரியத் திட்டங்களைச் செய்து நிறைவேற்ற முடியும். எனவே பாடுகளின் காலத்தில் வாய்மூடி அமர்ந்திருத்தல் மிகப்பெரிய பக்தியின் வெளிப்பாடாகும்.

## யோபுவுக்கு கிடைத்த மறுவாழ்வு

### யோபுவின் மறுவாழ்வில் 5 ஆசீர்வாதங்கள் அடங்கியிருந்தன

**1. தேவன் தம்மை யோபுவுக்கு வெளிப்படுத்தினார்:** அவன் கண்கள் திறக்கப்பட்டது. தேவனைக் கண்டான். இது ஒன்று போதுமே! என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன். இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது (42:5). மனஸ்தாபப்படுதலும், மனந்திரும்புதலும். நண்பர்களுக்காய் பரிந்துபேசி ஜெபித்தலுமாகிய யோபு செய்த பரிகாரங்கள் தொடர்கின்றன (42:6, 8, 9, 10).

**2. இரட்டிப்பான ஆசீர்வாதங்கள் (42:10)** கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார்.

யோபுவுக்கு முன் இருந்த எல்லாவற்றைப்பார்க்கிலும், இரண்டத்தனையாய் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்.

**3. ஒப்புரவாகுதலின் ஆசீர்வாதம் (42:11)** அப்பொழுது அவனுடைய எல்ல சகோதரரும், சகோதரிகளும் முன் அவனுக்கு அறிமுகமான அனைவரும் அவனிடத்தில் வந்து அவன் வீட்டிலே அவனோடே போஜனம்பண்ணி கர்த்தர் அவன்மேல் வரப்பண்ணின தீங்கினிமித்தம் அவனுக்காக அங்கலாய்த்து, அவனுக்கு ஆறுதல் சொல்லி, அவரவர் ஒவ்வொரு தங்கக்காசையும், அவரவர் ஒவ்வொரு பொன் ஆபரணத்தையும் அவனுக்குக் கொடுத்தார்கள். தேவனை சபித்து ஜீவனை விடச்சொன்ன மனைவியும் அவனுடன் ஒப்புரவானாள்.

**4. ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் அவனுக்குப் பிறந்தார்கள்:** (பரலோகத்தில் பத்து, பூலோகத்தில் பத்து) யோபுவின் பெண் பிள்ளைகள் அர்த்த புஷ்டியுடன் பெயரிடப்பட்டனர். எமிமாள் (புறா அல்லது பிரகாசமான எதிர்காலம்), கெத்சீயாள் (லவங்கப்பட்டை, வாசனைத் திரவியம), கேரேனாபுக் (கண் மை வைக்கும் அஞ்சனக் குடவை), இவையனைத்துமே உருவகப்பொருளுடன் யோபுவின் எதிர்காலத்தை படம் பிடித்துக்காட்டின.

**5. நீண்ட பூரண ஆயுள்:** இதற்குப் பின்பு யோபு நூற்று நாற்பது வருஷம் உயிரோடிருந்து நாலு தலைமுறையாகத் தன் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும், பிள்ளைகளையும் கண்டான். யோபு நெடுநாள் உயிரோடிருந்து பூரண வயதுள்ளவனாய் மரித்தான் (42:16,17), தனக்கு வந்த சோதனைகளுக்கும், பட்ட பாடுகளுக்கும் இதைவிட என்ன வேண்டும் ஒரு பக்தனுக்கு! பக்தி வாழ்வே மேலானது. பரிசுத்த பாதையே நேரானது!! எந்த சூழ்நிலையிலும் கர்த்தரை அண்டிக்கொண்டிருப்பதே பாக்கியம்!! ஐந்து சோதனைகளுக்குப் பின்பு ஐந்து ஆசீர்வாதங்கள் கிடைத்தது அருமை, அருமையிலும் அருமை!

## யோபு புத்தகம் நமக்குத் தரும் செய்தி

மனிதர், சிருஷ்டி கர்த்தராகிய தேவனை நம்ப வேண்டும் என்றும் பரிசுத்தமாய் வாழ வேண்டும் என்றும் அவர் எதிர்பார்க்கிறார். எனினும் மனுக்குலத்துக்கு எதிராக செயல்படுகிற எதிரி ஒருவன் இருக்கிறான். அவன் சாத்தான் என்று அறியப்படுகிறான். மனுக்குலத்துக்கு பாடுகளும், துன்பங்களும் இந்த சத்துருவினால் வருகிறது. ஆனால் தனக்கு வரும் துன்பத்துக்குரிய காரணம் என்னவென்று தேவனைச் சார்ந்து வாழும் ஒரு பக்தனுக்குத் தெரிவதில்லை. அது புரியாத புதிராக வைக்கப்பட்டுள்ளது. பாடுபடும் பரிசுத்தவானையும் அவனது சூழ்நிலையையும் புரிந்துகொள்ள எவராலும் இயலவில்லை. பிரச்சனையை மேலோட்டமாகவோ, அல்லது பாடுகளின் ஒரு பக்கத்தை மட்டுமே பார்க்கும் பிறர், நெருங்கிய நண்பராயிருந்தாலும், வாழ்க்கை துணையாயிருந்தாலும் தங்கள் அறியாமையையே வார்த்தைகளாக வெளிப்படுத்துகின்றனர். எனினும் பாடுபடும் பக்தன் ஒருவன் தனது பாடுகளின் மத்தியிலும் தன்னைப் படைத்த கர்த்தர், பராமரித்து வருகிற சிருஷ்டி கர்த்தர் ஒருவர் உண்டு என்பதை நம்ப வேண்டும் அவருக்குப் பயப்பட வேண்டும். இதுதான் யோபுடைய சரித்திரம் நமக்குத்தரும் செய்தியாகும். யோபுவின் உத்தமம் உறுதியானது என்பதை சாத்தானுக்கும் புரிய வைப்பதே யோபுவுக்கு வந்த பாடுகளின் நோக்கம். அதன் மூலம் அன்றும், இன்றும், என்றும் பாடனுபவிக்கும் பக்தர் அனைவருக்கும் யோபு நல்ல ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும்படியே இப்புத்தகம் எழுதப்பட்டது எனலாம்.



## REGULAR FULL TIME COURSES

### முழு நேர பயிற்சி வகுப்புகள்

முழு நேர ஊழியத்திற்கு அர்ப்பணித்திருக்கும் சகோதரர்களுக்கு

போதனை மொழி: தமிழ்

- இறையியல் பட்டப்படிப்பு
  [Bachelor of Theology]
  தகுதி: 12ம் வகுப்பு காலம்: 3 ஆண்டுகள்
- இறையியல் டிப்ளோமா
  [Diploma in Theology]
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்
- இறையியல் சான்றிதழ்
  [Certificate in Theology]
  தகுதி: 10ம் வகுப்புக்கு கீழ் காலம்: 2ஆண்டுகள்

**முறையான வேதாகம கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு**

**ADMISSION OPEN**

## EVENING PART TIME COURSES

### பகுதி நேர பயிற்சி வகுப்புகள்

For Both Men and Women

Classes: Monday, Thursday & Friday | 6:30 – 8:30 Pm

போதனை மொழி: தமிழ் மற்றும் ஆங்கிலம்

- MASTER OF ARTS IN CHRISTIAN MINISTRY
  Eligibility: Any Degree | Duration: Two Years
  Medium of Instruction: English
- கிறிஸ்தவ ஊழியம் – முதுகலை
  தகுதி: பட்டபடிப்பு காலம்: 2 ஆண்டுகள்
- கிறிஸ்தவ ஊழியம் – டிப்ளோமா
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்

For further information and application form, please contact
Rev. M. Sampath (Vice President, MABC)

MADRAS ASSEMBLIES OF GOD BIBLE COLLEGE

No. 191 (New No. 6), Anna Salai,
Little Mount, Chennai – 600 015, TN.
Phone: 044 – 2235 1646 | 2235 3100
Mobile: +91 – 94442 87322
Email: mabc_edu@yahoo.com



# தடைகளைத் தகர்ப்போம், தரணியை வெல்வோம்

Rev. J. தேவதாசன் கலையரசன்
மண்டலத் தலைமை போதகர், அம்பத்தூர் மண்டலம்

**சுவிசேஷ ஊழியம் பாகம் – 2**

நமது நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் சுவிசேஷ ஊழியம் செய்ய வேண்டுமா? அல்லது சூழ்நிலைகள் மாறுகின்றவரை சுவிசேஷ ஊழியம் செய்வதின் வேகத்தைக் குறைத்துவிடலாமா? என்று சிலர் யோசிக்கின்றனர். இரும்புத்திரை நாடுகள் என்று அழைக்கப்படும் கம்யூனிச நாடுகளில், இஸ்லாமிய நாடுகளில் இன்னும் நற்செய்தி ஊழியம் செய்யப்படுகிறதில்லையா? ஏன் நாமும் அதுபோன்று வேறு சில புதியமுறைகளில் சுவிசேஷ ஊழியத்தைச் செய்யக்கூடாது? என்று கேட்போரும் இருக்கத்தான் செய்கிறார்கள். இல்லை இல்லை, சத்தியத்திற்காக உயிரை துச்சமென மதித்து, அச்சமின்றி சொல்வோரே இன்றைய தேவை. எனவே எதிர்ப்புகளுக்காகவும் காலம் காலமாக செய்துவரும் நற்செய்தி ஊழிய சூழ்நிலையில் ஒரு ஸ்தலசபை போதகர், விசுவாசிகள் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை இக்கட்டுரையில் ஆலோசிப்போம்.

இக்காலங்களில் ஊடக வழியாக திட்டமிட்டு பரப்பப்படும் ஒளிநாடாச் செய்தி, விசுவாசிகளின் சுவிசேஷ ஊழியத்தின் ஆர்வத்தைக் குறைத்திருக்கிறதா? தீவிரப்படுத்தியிருக்கிறதா? என்பது ஆய்வுக்குரிய கேள்விகளே. ஆதிச்சபையினரை சுவிசேஷ ஊழியத்தில் **தீவிரவாதிகளாக** மாற்றியதில் உபத்திரவத்திற்கும் ஒருபங்கு இருந்தது என்பதே வரலாறு. ஏனென்றால் உபத்திரவத்திற்கு பிறகே அவர்கள் தீவிரமாக சுவிசேஷத்தை அறிவித்தார்கள் (அப்.8:1-4; 11:19-21). சபைகள் ஸ்தாபித்தார்கள். இன்றைக்கு எதிர்ப்புகள் சுவிசேஷ ஊழியத்திற்கு **அச்சுறுத்தலாக, தடைகளாக** கருதப்படுமானால் யாரிடம் தவறு இருக்கிறது? ஆதிச்சபை போல தற்காலசபைகள் உபத்திரவத்திற்கு மத்தியில் இப்போது இல்லாததினாலா? அல்லது நாம் மக்களுக்கு போதிக்க வேண்டிய பிரகாரம் போதிக்கவில்லையா? தீவிரமடையச் செய்ய ஏதாகிலும் செய்ய தீர்மானிக்க வேண்டும். இதற்காக சபைகள் விழித்தெழ வேண்டியகாலம் இது.

## 1. சுவிசேஷ ஊழியத்தின் எதிர்ப்புகளும், தடைகளும் புதிதல்ல

ஆதிச்சபையார் தேவனை மகிழ்வோடு துதித்து, அப்போஸ்தல உபதேசத்தில் வளர்ந்து வந்தார்கள். ஸ்தேவான் சம்பவத்திற்குப் பிறகு மிகுந்த உபத்திரவம் கட்டவிழ்க்கப்பட்டது. சிதறடிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களோ, சுவிசேஷ ஊழியத்தை நிறுத்திவிடாமல், இன்னும் தீவிரமாகவே செய்தார்கள் (அப். 8:1-4). இது நமக்கும் சிறந்த படிப்பினையைத் தருகின்றது.

### அவர்கள் சந்தித்த தடைகள் என்ன?

1. அரசாங்கத்தின் தடைகள், பயமுறுத்தல்கள் (அப். 4:17,18)
2. சொந்த ஜாதி ஜனங்கள் ஏற்படுத்திய எதிர்ப்பு (2 கொரி. 11:24,26).
3. மொழி மற்றும் ஜாதிப் பிரச்சனையால், வந்த தடைகள் (அப். 6:1,2).
4. பொருளாதார பற்றாக்குறை (அப். 11:28), மேலும்

5. உபத்திரவத்தால் சிதறடிக்கப்பட்டபோது, சபைதரும் பாதுகாப்பையும் இழந்தார்கள் (அப்.8:1-4). நாமும் இன்று அதே பிரச்சனைகளைத் தானே சந்திக்கிறோம். நம்மைவிட அவர்கள் தானே அதிகம் எதிர்ப்புகளை சந்திக்கிறார்கள். ஆயினும் அவர்களை சுவிசேஷ ஊழியத்தில் ஆர்வம் கொள்ளத் தூண்டியது எது? எப்படி சரித்திரத்தில் சாதித்தார்கள்? யோசித்துப்பாருங்கள், உங்கள் உள்ளம் கொளுந்து விட்டு எரியும்.

## 2. சுவிசேஷ ஊழிய ஆர்வத்தில் புதுப்பிக்கப்பட விரும்புகிறீர்களா?

காலங்கள் மாறினாலும் அன்றும் இன்றும் ஒரே சூழ்நிலையில் தான் சபை இருக்கிறது. எனவே சூழ்நிலைகளைக் கடந்து அல்லது பொருட்படுத்தாமல், சுவிசேஷ ஊழியத்தில் முன்னேறிச் செல்ல விரும்புகிறீர்களா? அதற்குத் தேவையான உந்துசக்தி என்ன? ஆதிச்சபையின் அனுபவத்திலிருந்துக் கற்றுக்கொள்ள இயலுமா? அதை அப்படியே அடி பிறழாமல் பின்பற்ற முடியுமா? இப்பகுதியில் இதுகுறித்து ஆராய்வோம். முன்னதாக ஏன் இன்றைய சபையாரில் அநேகர் சுவிசேஷ ஊழியத்தில் ஆர்வமற்று இருக்கிறார்கள் என்பதையும் சிந்திப்பது அவசியம்.

## ஏன் இன்று அநேகர் தயங்குகிறார்கள் !

1.நற்செய்தி அறிவிப்பது போதகரின் அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட சில விசுவாசிகளின் வேலை. நான் செய்யத் தேவையில்லை என்று சிலர் நினைக்கிறார்கள்.

2.அழைப்பின்றி செய்யக்கூடாதே என்று நினைத்து ஊழிய அழைப்பிற்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

3.உலக மனிதர்கள் முன்பு தங்கள் மதிப்பை இழந்துவிடக்கூடாது என்று பயப்படுகிறார்கள்.

4. வேறுசிலர் எதிர்ப்புகளுக்கு பயந்து நடுங்கி ஒதுங்குகிறார்கள். இதை வாசிக்கிற ஒருவர் கூட சுவிசேஷ ஊழியத்தில் தயங்கக்கூடாது என்பதே என் ஜெபம்.

## நாம் தீவிரமாக செய்யவேண்டுமானால் தேவைப்படுவது என்ன?

1. உபத்திரவத்தினால் சிதறினார்கள். ஆனால் சுவிசேஷம் அறிவிப்பதைத் தீவிரப்படுத்தினார்கள். பவுல் சொல்லும் ஒரே காரணம், “அன்பு நெருக்கி ஏவியதாக கூறுகிறார்” கிறிஸ்துவின் மேலும் பிறர்மேலும் அன்புபெருகினால் இன்றே ஆவிக்குரிய மந்தநிலை நீங்கிவிடும். சுவிசேஷ பாரம் நம் சுமையாக மாறிவிடும்.

2. தாங்கள் ஆராதிக்கும் தெய்வமே, தெய்வம் ஆகவே பிறமக்கள் தேவனை தடவியாகிலும் கண்டுகொள்ள வேண்டும் என்று அவர்கள் நினைக்க ஆரம்பித்துவிட்டால் நற்செய்தி ஊழியம் அழிந்துவிடும். தேவனை அறியும் அறிவினால் நிரப்புவோம். விக்கிரகங்களை காணும்போதெல்லாம் உள்ளம் நொறுங்கும்.

3. சுவிசேஷத்தின் வல்லமை தங்கள் வாழ்விலும், பிறர் வாழ்விலும் ஏற்படுத்திய விளைவுகளை மாறுதல்களை அனுபவத்திருந்தபடியால் அதை பிறருக்கும் கொடுக்கும் ஊக்கம் அடைந்தார்கள். கிறிஸ்துவோடு உள்ள உங்கள் உறவு, இரட்சிப்பின் சந்தோஷம், வாழ்க்கைமாற்றம், உண்மையாக இருக்கும் பட்சத்தில் அது உங்களை சும்மாயிருக்க விடாது. இந்த அனுபவங்களில் குளிர்ந்துபோனால் சுவிசேஷ ஊழிய ஆர்வமும் மங்கிவிடும்.

4. பரிசுத்தாவியின் அபிஷேகத்தின் ஒரே நோக்கமே, பிறருக்கு சுவிசேஷம் அறிவிப்பதற்காகத்தான் என்று இருந்தது (அப்.1:8). இன்று நாம் ஆராதனை வேளையில் மட்டும் அந்நிய பாஷை பேசுவதோடு நின்றுவிடாமல் வரங்களைப் பயன்படுத்துவதில் வளருவோம். நாம் பயன்படுவதை நமது **கண்களே பார்க்குமானால்....** நாமும் நற்செய்தி ஊழிய தீவிரவாதிகளாகி விடுவோம்.

## 3. நாமும் தடைகளைத் தகர்ப்போம், தரணியை வெல்வோம்

நற்செய்தி ஊழியத்தில் உங்கள் நிலை எப்படி இருக்கிறது என்பதை சோதித்துப் பாருங்கள். கடைசியாக நீங்கள் எப்போது பிறருக்கு சுவிசேஷம் அறிவித்தீர்கள்? என்று கேட்கப்படும் கேள்விக்கு உங்கள் பதில், நேற்று அல்லது கடந்த வாரத்தில் சொன்னேன் என்று இருக்குமானால் நீங்கள் ஆவிக்குரிய நிலையில் ஆரோக்கியமாக இருக்கிறீர்கள், அல்லது வெகுநாட்களாகிவிட்டது என்பீர்களேயாகில், நீங்கள் எழுச்சி பெறுவது உடனடி அவசியம். உங்கள் ஆவிக்குரிய அனலை இன்றே புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

### நீங்கள் செய்ய வேண்டியது ......

1. வெட்கம்,பயம் போன்ற உங்களுக்கு இருக்கும் தடைகளை கீழ்கண்ட வசனங்களை அறிந்து, விடுதலை பெறுங்கள் (மத்.10:32; ரோமர் 1:18; 2 இராஜா.7:9; எசே.3:17,21).
2. எதிர்ப்பு, விமர்சனங்கள் போன்ற பிறரால் ஏற்படுத்தும் தடைகள் இருக்குமானால் கீழ்கண்ட வசனங்களை அறிந்து, தடைகளை வெல்லுங்கள் (லூக்.10:3; மத்.28:19,20).
3. விசுவாசியாதவர்கள் நண்பர்கள், உங்கள் உறவினர்கள், இரட்சிக்கப்படாத தினால் அடைய இருக்கும் ஆக்கினைத் தீர்ப்பை, நரக வேதனையை அறிந்து, எந்தவிலை கொடுத்தும் சுவிசேஷம் அறிவிக்க தீர்மானியுங்கள் (மாற்கு 16:16; யாக்.5:20).
4. நற்செய்தி ஊழியம் செய்தால் மட்டுமே கிடைக்கக்கூடிய ஆசீர்வாதங்களை இழந்துவிடாதிருக்க உடனடியாக செயல்படத் தீர்மானியுங்கள் (நீதி.11:30; தானி.12:2; யாக்.5:20; யோ.12:26).

### இறுதியாக

எதிர்ப்புகளின்போது அவர்கள் **கடைபிடித்த முறைகளை** நீங்கள் கற்றுக்கொண்டால்.... நீங்களும் தடைகளை வெல்வீர்கள். தரணியை கிறிஸ்துவுக்குச் சொந்தமாக்குவீர்கள். அடுத்த கட்டுரையில்... எந்த சூழ்நிலைக்கும் பொருத்தமான சுவிசேஷ ஊழிய முறைகளைச் செய்வது குறித்துக் கற்றுக்கொள்வோம்.

---

**மின்னஞ்சல் (E-Mail) மூலமாக பரிபூரண ஜீவன் பத்திரிக்கை படிக்க விரும்புவோர் எங்களது Mail ID-யில் தொடர்பு கொள்ளவும்**

**ag.paripooranajeevan@gmail.com**



# தேவசித்தம் செய்வதே நமது கடமை

**Rev. V.J. பாலஸ்**
தலைமைப் போதகர்
சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை வாசகர்களுக்கு இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். மனிதனுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு காரியங்களிலும் தேவசித்தத்தை அறிந்துகொள்ள தேவன் வேதத்தை மனிதனுக்கு தேவ ஆவியிலே எழுதி கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு மனிதனுடைய தோற்றம் முதல் முடிவு வரைக்கும் தேவன் ஒரு திட்டம் வைத்திருக்கிறார். இதை வேதத்தின் மூலம் அறிந்து அவருடைய சித்தத்தை செய்யவேண்டும்.

**1. எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்** (1தீமோ.2:4). சர்வலோகத்திலுள்ள எல்லா மனிதனும் இரட்சிக்கப்பட ஒரே வழி இயேசு ஒருவரே. “இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி” என்று யோவான் ஸ்நானன் அவரைக்குறித்து சாட்சி கொடுத்தான்(யோவான் 1:29). ஆகவே அனைவரும் இயேசுவை ஏற்றுக்கொண்டு மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**2. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது** (1 தெச.4:3). ஏனென்றால் நம்முடைய தேவன் பரிசுத்தமான கடவுளாகும். அவருடைய சபை மக்கள் அவரைப்போல பரிசுத்தமாக வாழ வேண்டும். அப்பொழுது மாத்திரமே அவரை உலகத்திற்கு வெளிப்படுத்த முடியும். புறஜாதி மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் ஒவ்வொரு ஊழியரும், விசுவாசியும் பரிசுத்தமாய் வாழவேண்டும். நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:2).

**3. தேவனுக்காக பாடுகள் அனுபவிப்பது அவருடைய சித்தமாயிருக்கிறது.** தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் (1பேதுரு 4:19). ஆண்டவருக்கு ஊழியம் செய்யும்போது பாடுகள் வரும். சத்தியத்தை அறிவிக்கும்போது உபத்திரவம் வரும். அதை பாக்கியமாக எண்ண வேண்டும். ஊழியர்களும் விசுவாசிகளும் எவ்வளவு எதிர்ப்புகள் தடைகள் வந்தாலும் ஆத்தும ஆதாயம் செய்து சபையில் மக்களைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். பவுல் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை தேவசித்தம் செய்வதிலே உறுதியாக இருந்தார். ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்று ஜெபித்து (அப். 9:4-6), பரிசுத்த ஆவியிலே நிறைந்து தேவ வசனத்தை பவுலைப்போல தைரியமாக அறிவிக்க வேண்டும்.

**4. தேவசித்தம் செய்தால் மாத்திரமே நாம் பரலோகம் செல்ல முடியும்** (மத்.7:21). இயேசு உலகத்திலே வாழ்ந்த நாட்களில் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை பிதாவின் சித்தம் செய்தார் (லூக்கா 22:42). தேவ ஊழியர்களும், விசுவாசிகளும் கடைசிவரைக்கும் எவ்வளவு கஷ்டங்கள் நஷ்டங்கள் வந்தாலும் தேவசித்தம் செய்வதில் உறுதியாயிருப்போம், உண்மையாயிருப்போம். கர்த்தர்தாமே நம்மை ஆசீர்வதித்துக் காப்பாராக.

# Antioch Biblical Seminary & College

Affiliated with Tamil District Council of SIAG

Accredited by Asia Theological Association (ATA)

## M.Th. Program : *A Non - Residential* **Course** *in* **Christian Theology**

## Wanted : *Residential Faculty with M.Th./Ph.D. (ATA / Serampore) in any discipline. (North Indians Preferred)*

| Courses | Duration | Qualification |
|---|---|---|
| B.Th. | 3 Years | 12th Pass |
| M.Div. | 2/3 Years | B.Th. (ATA)/any University Degree |
| Dip.Th. | 2 Years | 10th Pass |






## College Reopens in the first week of June 2018

The Registrar

**ANTIOCH BIBLICAL SEMINARY & COLLEGE**

Post.Box-05, Pondicherry University, Pillaichavady,Mathur Road, Puducherry- 605 014.
Office Phone: (0413) 2970521/22/23 Cell: 09488212476 Email: abscollege@gmail.com.
Website: www.antioch.in



# ஆசீர்வாதமாய் பரவப்பண்ணும் தேவன்

**Rev. ஜே.ஜே. செல்வின் வில்சன்**
சீயோன் ஏ.ஜி. சபை, நெல்லை - 7

பல ஆயிரம் ஆண்டுகட்குமுன், **ஆபிராம்** எனும் ஒரு தனி மனிதனைத் தெரிந்த தேவன், இன்றளவும் அவன் புகழினை, அவன் சந்ததியைத் தமது வல்லமைக்குச் சாட்சியாகத் திகழ்ந்திடும்படி, எல்லா பலத்திலும் பரவப்பண்ணின வண்ணமே இருக்கிறார்.

அவரே, இன்று நம்மையும் வாழ்விக்கவும், நற்கிரியைகளில் பரவப்பண்ணவும், மிகுந்த விழிப்புடன், கரிசனையுடன் செயலாற்றியும் வருகிறார். அதற்கென அவர் எடுக்கும் நடவடிக்கைகள் அற்புதமானவை.

## 1. பரவும்படி அழைத்து, தரிசனம் தருகிறார்...!

"நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ... உன்னைப் பெரிய ஜாதியாக்கி (தேசங்களாக்கி). ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். **நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்**" என்றார் (ஆதி.12:1,2). இந்த தேவ வாக்கு இன்றும் நிறைவேறியே வருகிறது.

தேவனின், பரவப்பண்ணும் திட்டத்துக்கு இடையூறு செய்யும்படி, சாத்தான் பல்வேறு சூழ்நிலைகள், மனிதர்கள், தடைகள் மூலம் குறுகப்பண்ணும் திட்டங்கள் வகுத்துச் செயல்பட்டாலும், தடைகளை நொறுக்கி, தேவன் அற்புதமாய்த் தமது சித்தம் நிறைவேற்றுகிறார். (ஏசயா 45:2; மீகா 2:13). இந்து தேசம் முதல் எத்தியோப்பியா தேசம் வரைக்குமுள்ள 127 நாடுகளிலும் தேவஜனம் பரம்பியிருந்ததைக் கண்ட **ஆமான்** எரிச்சலடைந்தான் (எஸ்தர் 1:1; 3:8). இன்று நமக்கு அவர் குறித்துள்ள, அந்த இலக்கை நோக்கி விசுவாசத்துடன், பரிசுத்தத்துடன், ஜெபத்துடன் தொடர்வோம். அதுவே நம் அழைப்பு. நம்மைக் குறுகப்பண்ணும் எவ்வித முயற்சிகளையும் கர்த்தரே தகர்த்துப்போடுவார். நாம் அவர் பாதையில், சீராய் நடந்தால், பரவுவோம். வளர்வோம்....!

## 2. துன்புறுத்துவோர் கர்த்தரால் சந்திக்கப்படுவார்கள்...!

இஸ்ரவேலரை, 430 ஆண்டுகள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து, தமது ஓங்கிய புயத்தால் விடுவித்து, கானான் தேசம் நோக்கிப் புறப்படப்பண்ணினவர், நம்மையும், இன்றைய பலவித சிறையிருப்பிலிருந்து, தமது பராக்கிரமத்தால் நிச்சயம் விடுவிக்கிறார். பரவச்செய்கிறார்.

எங்கு சிக்கினீர்கள்? எதில் ஞானமற்று நடந்துகொண்டீர்கள்? சிந்தியுங்கள். தேவ இரக்கத்துக்காகக் கெஞ்சி ஜெபியுங்கள். விடுவிப்பார். அவரது நோக்கம், நமது நாமத்துக்குப் புகழ்ச்சியாகத் தமது ஜனம் பரவுதலும் பெருகுதலுமே.

பக்தன் **தாவீது** சொன்னான் : "என் கைகளைப் போருக்கும், என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" (சங்.144:1).

ஆம், எதிரிகள் சூழ்ச்சிகளை, சதிகளை இனம் கண்டு ஜெயிக்க நமக்கு விசுவாச ஜெபப் பயிற்சியளிக்கிறார்.

தந்தைக்கு உதவியாயிருந்த, தூயவன் **யோசேப்பு,** ஒரு கட்டத்தில் சொந்தச் சகோதரர்களின் துரோகத்துக்குள்ளாகி, விற்கப்பட்டு, எகிப்து தேசத்தில் சேர்க்கப்பட்டு,

போத்திபார் எனும் பிரபுவுடைய அன்புக்குப் பாத்திரவானாகிக் கனம்பெற்றாலும், ஒரு ஸ்திரீயின் விபரீதக் கபட நாடகத்தால், சிறைக்கு அனுப்பப்பட்டான். ஆனாலும், அங்கும் கர்த்தர் அவனுக்கு அனுசாரியாக இருந்து ஆசீர்வதித்தார். கர்த்தர் யோசேப்பை மறக்கவில்லை. நம்மையும் கர்த்தர் எப்போதும் நினைத்திருக்கிறார் (சங்.115:12).

## 3. இன்னலுக்கு அஞ்சாதீர்கள்...!

சாத்தானின் ஏவுதலால் வரும் பல பாடுகள் - உபத்திரவங்களால் வஞ்சகத்தால், மனம் நொந்து வேதனைப்படும், உத்தம தேவ ஊழியர்களே, விசுவாச சகோதரரே - சகோதரிகளே, யார் உங்களைக் கைவிட்டுவிட்டாலும், உங்களுக்கு விரோதமாய்ப் பலர் ஒன்றுக் கூடிச் செயல்பட்டாலும், **உங்களை அழைத்தவர்** எந்தச் சூழ்நிலையிலும் உங்களைக் கைவிட்டுவிடவே மாட்டார். தேவனின் சித்தப்படியான உங்கள் பரவுதலுக்கு எதிரான இடையூறுகளுக்கு நீங்கள் அஞ்சாதிருங்கள். தேவசித்தம் உங்களில் நிறைவேறும். அவற்றை உறுதியாய் நம்பிப் பற்றிப்பிடித்து ஜெயித்துவிடலாம். களிகூர்தலுடன் தேவனை மகிமைப்படுத்தலாம் (எண். 23:19;1சாமு. 3:19).

நாள் வந்தபோது, எகிப்தின் ராஜாவே யோசேப்பை நேரடியாக அழைக்க, கர்த்தர் வகைசெய்தார். யோசேப்பு ராஜாவுக்கு உதவிசெய்திட வந்து, ராஜாவின் சந்தேகம் தீர்த்து, மேலான அதிகாரம் பெற்று, 80 ஆண்டுகள் ஆளுகை செய்தான் (ஆதி.41:38-44).

பெருந்தன்மையுள்ள யோசேப்பு, தன் வயதான தந்தையையும், தனக்குத் துரோகஞ்செய்த சகோதரர்களையுமே, எகிப்துக்கு வரவழைத்து, அவர்களைப் போஷித்து, அன்புப் பாராட்டி ஆதரித்து வாழ்வித்தான். நாம்...?

சகோதரரிடம் அவன் சொன்னான் : "நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள். **தேவனோ....** வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படி அதை **நன்மையாக முடியப்பண்ணினார்**" (ஆதி.50:20). இஸ்ரவேலரை எகிப்தியர் பொறாமைப்படுமளவுக்குக் கர்த்தர் அத்தேசத்தில் பரவப்பண்ணினார்

## 4. ஆசீர்வாதமான பரவுதலுக்கு, சில பின்னடைவுகளும் அவசியமே...!

வளர்ச்சி, வெற்றி, முன்னேற்றம், நிறைவு, மகிழ்ச்சி என்று போய்க்கொண்டிருக்கும் பாதையில், நாம் மேன்மேலும் பக்குவப்பட, சில புதிய பயிற்சிகள் பெற்றிட, உணர்வு பெற, சில இடையூறுகளை, பின்னடைவுகளை, உபத்திரவங்களை, தேவன்-சில குறிப்பிட்ட காலங்கள் மட்டும் அனுமதிக்கிறார். பாடுகள் பலத்துவிடுகின்ற நேரங்களில், கர்த்தர் கைவிட்டுவிட்டாரோ? நாம் தவறிழைத்துவிட்டோமோ? எல்லாம் முடிந்துபோனதோ? - என்றெல்லாம் பயந்துபோய்விடாதீர்கள். அவர் ஒருபோதும் கைவிட்டுவிடவே மாட்டார். தக்க சமயத்தில் உதவிக்கு வருவார். காப்பார். பரவச்செய்வார்.

அருமையான தேவ ஊழியர்களே, தேவஜனங்களே, கர்த்தர் உங்களை அழைத்துத் தெரிந்துகொண்டபின், நிச்சயமாகவே நீங்கள் உயர்த்தப்படுகிறீர்கள். கனமடைகிறீர்கள். இதை யாரும் தடுக்க முடியாது. ஆனால், ஒரு பொறாமையின் கூட்டமும் உருவாகி, உங்களுக்கு இடையூறும் செய்யும். பயப்படாதீர்கள் (ரோமர் 8:28). **சகலத்தையும் கர்த்தர் உங்களுக்கு நன்மையாகவே முடியப்பண்ணுவார்.**

நீங்கள் பரிசுத்தத்திலும், தேவபக்தியிலும், அன்பிலும், நற்பண்பிலும், தேவப்பயத்திலும், நேர்மையிலும், கடும் உழைப்பிலும், ஊழியத்திலும், உத்தம ஆசீர்வாதங்களிலும் பரவும்படி, கர்த்தரே உங்களுக்குத் துணை நிற்பார். எவரும் உங்களை மேற்கொள்ள அவர் விட்டுவிடார். தக்க சமயத்தில் தகுந்த நடவடிக்கைகள் எடுத்து, தம் அன்பை, வல்லமையை நிரூபிப்பார். நீங்கள் சகல நன்மைகளிலும் பரவுவீர்கள். ஆமென்.

சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ

பெ. பெவிஸ்டன்
பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்



ஹாய் குட்டீஸ்... எல்லாரும் எப்படியிருக்கிறீங்க?

150 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் வடகிழக்கு மாநிலத்தில் ராஜா என்ற ஒரு பழங்குடி இனம் இருந்தது. மனித தலைகளை போட்டி போட்டு வெட்டுவது தான் இவர்களது பொழுதுபோக்கு. அவர்களது திறமை, வீரம் அனைத்தையும் இதிலே வெளிப்படுத்தினர். உதாரணமாக திருமணத்திற்கு பெண் பார்க்க சென்றால், பையன் எத்தனை தலைகளை வெட்டியிருப்பான்? என கேட்பார்கள். ஆகவே திருமண வயதில் இருக்கும் ஒரு வாலிபன் தன்னால் இயன்ற அளவு மனித தலைகளை வெட்டி தன்னுடைய வீட்டின் சுவரில் மாட்டி வைத்திருப்பான்.

இந்த கொடூரமான ஆதிவாசிகள் மத்தியில் இயேசு கிறிஸ்துவின் அன்பையும், சமாதானத்தையும், விசுவாசத்தையும் அறிவிக்க இங்கிலாந்து தேசத்திலிருந்து வேல்ஸ் மிஷனெரிகள் இங்கு வந்தனர். பல ஆண்டுகள் ஜெப ஊழியம் மட்டுமே செய்தனர். பல மிஷனெரிகள் இரத்த காட்சிகளாக மரித்தனர். எனினும் பல ஆண்டுகளுக்கு பின் ஒரு மிஷனெரி மூலம் ஒரு ராஜா இன ஆதிவாசியும் அவனது மனைவியும், இரு பிள்ளைகளும் இயேசுவை ஏற்றுக்கொண்டனர். இதை கேள்விப்பட்ட கிராம தலைவன் கடும் கோபமடைந்து அவனது குடும்பத்தை அழைத்து "நீ எல்லாருக்கும் முன்பாக உன் விசுவாசத்தை மறுதலிக்க வேண்டும்" என்று கூறினான். அந்நேரத்தில் அம்மனிதனை பரிசுத்த ஆவியானவர் அபிஷேகம் செய்தார். வாயில் புதிய ராகமும் புதிய வார்த்தையும் உதயமானது.

**"இயேசுவின் பின்னே போக துணிந்தேன்**
**பின்னோக்கன் நான் பின்னோக்கேன் நான்"**

இந்த பாடல் வரிகளை கேட்ட கிராம தலைவன் இன்னும் கடும் கோபமடைந்து தன்னுடைய வீரர்களிடம் அவனது இரு பிள்ளைகளையும் அடித்து கொலை செய்யும்படி கூறினான். இரு பிள்ளைகளும் தரையில் விழுந்து துடித்துக்கொண்டிருக்கையில் கிராம தலைவன் சொன்னான். "இப்போது உன்னுடைய இரு மகன்களையும் இழந்துவிட்டாய் உன் மனைவியையும் இழக்க போகிறாய்" என்றான். உடனே அவன் பின்வரும் இரு வரிகளை பாட ஆரம்பித்தான்.

**"யாரில்லையெனினும் பின் தொடர்வேனே**
**பின்னோக்கேன் நான் பின்னோக்கேன் நான்"**

இதனால் மிகவும் கோபமடைந்த இந்த கிராம தலைவன் அவனது மனைவியை கொலை செய்ய உத்தரவிட்டான். அவரும் கொலை செய்யப்பட்டார். "இப்பொழுது இறுதி வாய்ப்பு தருகிறேன். விசுவாசத்தை மறுதலித்து உயிர் பிழைத்துக்கொள்" என்றான். மரணத்தை எதிர்கொண்டிருக்கும் அந்த மனிதன் தம் மனதை விட்டு நீங்காத கடைசி இரு வரிகளை ஆனந்த கண்ணீருடன் பாடினான்.

**"சிலுவை என் முன்னே, உலகம் என் பின்னே**
**பின்னோக்கேன் நான் பின்னோக்கேன் நான்"**

அவனது பிள்ளைகள் மற்றும் மனைவியை போலவே அவனும் நொடிப்பொழுதில் கொலை செய்யப்பட்டான். அவன் மரித்தாலும் அவன் பாடிய பாடல்

வரிகள் கிராம தலைவன் வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. அவனது அசாதாரணமான மரணம் தான் அதற்கு காரணம். 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இயேசுவிற்காக தங்கள் ஜீவனையும் கொடுக்க முன்வந்ததை எண்ணி வியத்தான். அந்நேரம் அவனை இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி சந்திக்க, அவன் தன்னையும் அறியாமல் “நானும் இயேசுவுக்கு சொந்தமானவன்” என அறிக்கையிட்டான். தலைவன் வாயிலிருந்து வந்த அறிக்கையில் முழு ராஜா இனமும் இயேசுவை கிறிஸ்துவாக ஏற்றுக்கொண்டது. அன்பை அந்த ராஜா இனம் தான் இன்றைய நாகலாந்து இந்தியாவின் ஒரே கிறிஸ்துவ மாநிலமாக இன்று அழைக்கப்படுகிறது.

இயேசுவின் பின்னே போக துணிந்தேன் என்ற பாடல் உருவான சூழ்நிலையை தாங்கள் கற்றுக்கொண்டீர்கள். பிரியமான அன்பு தம்பி, தங்கச்சி... இன்று நீ இயேசு கிறிஸ்துவின் மேல் வைத்திருக்கிற விசுவாசம் எப்படியிருக்கிறது? நமக்காக ஜீவனை கொடுத்த உன் ஆண்டவருக்காக இன்று நீ எதையும் கொடுக்க ஆயத்தமா?

“நாகலாந்தின் சரித்திரம் தெரிஞ்சுக்கோ
நாதன் இயேசுவின் வல்லமையை புரிஞ்சுக்கோ”

இப்பகுதி குறித்த தங்களது மேலான கருத்துக்களை 97503 81784 என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

---

## மருத்துவக் குறிப்புகள்



**சாப்பிட்ட பிறகு செய்யக்கூடாதவைகள் அவசியம் அறிவோம்!**
**பல நோய்களை தவிர்ப்போம் !!**

1. சாப்பிட்டவுடன் தண்ணீரை வயிறுமுட்ட குடிக்கக்கூடாது. இதனால் ஜீரணநீர் நீர்ந்து போய் அஜீரணமாகும். பல நோய்கள்வர இது முக்கிய காரணமாக அமையும்.
2. சுமார் 40 நிமிடம் கழித்து தண்ணீர் தாகம் எடுக்கும்போது அப்போது குடிக்க வேண்டும்.
3. சாப்பிட்டதும் படுத்துவிடக்கூடாது. காரணம் குடல் செயல்பட மிகவும் சிரமப்படும். ஜீரணம் முறையாக நடக்காது.
4. குறைந்தது ஒரு மணிநேரம் கழித்தே உறங்க வேண்டும். இது மதியம் ஓய்வு எடுப்பவர்களுக்கும் பொருந்தும்.
5. சாப்பிட்டதும் குளிக்கக் கூடாது. குறைந்தது 2 மணிநேரம் கழித்தே குளிக்க வேண்டும்.
6. சாப்பிட்டு முடித்ததும் எந்த பழங்களையும் சாப்பிடக் கூடாது. காரணம் உணவின் ஜீரண நேரம் குறைந்தது 5 மணி நேரங்களாகும். பழங்களின் நேரம் அதிகபட்சம் 2 மணி நேரம் தான். இந்த வித்தியாசத்தால் நாம் சாப்பிட்ட பழம் வாயுவாக மாற்றம் பெறும். இதில் ஒரு பழத்துக்கு மட்டும் விதிவிலக்கு அது பேரீச்சம்பழம்.
7. சாப்பிட்ட உணவு ஜீரணமாகாத நிலையில் வேறு உணவுகள் எதையும் உண்ணக்கூடாது. காரணம் இவ்வாறு சாப்பிட்டால் ஏற்கனவே சாப்பிட்ட உணவு ஜீரணத்தை கடுமையாக பாதிக்கும். இதனால் சுகர் பிரச்சனை வர காரணமாக அமையும்.
8. குளிர் பானங்கள், ஐஸ்கிரீம், ஐஸ்வாட்டர் இவைகளையும் குடிக்கக் கூடாது. காரணம் உணவு ஜீரணமாக நமது குடலில் வெப்பம் இருக்கவேண்டும். அந்த வெப்பத்தை இந்த குளிர்பானங்கள் இல்லாமல் செய்துவிடும்.
9. சாப்பிட்டதும் பரபரப்பாக இயங்குவதோ நடப்பதோ பளுவானவற்றை தூக்குவதோ கூடாது. காரணம், அவ்வாறு செய்தால் உணவு கீழ்நோக்கி செல்லாமல் மேல் நோக்கி வரும். இதனால் நெஞ்சு எரிச்சல் வாயு தொல்லைகள் ஏற்படும்.

---

பெண்களுக்கான....

# திரித்துவ வேதாகமக் கல்லூரி

(A Theological Institution of the Tamil District Council of SIAG)
Accredited by Asia Theological Association (ATA)
Kanakkapillaivalasai, Sengottai, Tamilnadu – 627 809

| Course | Duration | Eligibility |
|---|---|---|
| Diploma in Theology (Dip.Th.) - Tamil | 2 Years | S.S.L.C Pass |
| Bachelor of Theology (B.Th.) - English | 3 Years | HSC (+2) Pass |
| Bachelor of Arts in Mission (B.A.Missions) - English | 3 Years | HSC (+2) Pass |
| Master of Divinity (M.Div.) English | 3 Years | Any Bachelor Degree |

இரட்சிப்பு, ஞானஸ்நானம்,
பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற,
ஊழிய அழைப்புடைய 18 வயது நிரம்பிய
பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!
திரித்துவ வேதாகமக் கல்லூரி, மாணவிகள் தங்கி படிப்பதற்கான
சிறந்த, நவீன வசதிகளைக் கொண்டுள்ளது.
அர்ப்பணிப்புள்ள சிறந்த கல்வித் தகுதியுடைய ஆவிக்குரிய,
அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கப்படுகிறது.

விண்ணப்பப் படிவங்கள் ஆயத்தமாய் உள்ளன!
பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வந்துசேர வேண்டிய

**கடைசி நாள் : மே 15, 2018**

விண்ணப்பப் படிவங்கள்
நேரில் பெற ரூ.130/- ; தபாலில் பெற ரூ.150/-

தொடர்பு :
The Registrar
**Trinity Bible College**
Kanakkapillaivasai, Post Box No. 25, Sengottai - 627 809
Phone : 04633 - 234243 & 95244 26186



# எங்களை புரிந்துகொள்ளுங்கள் !

Rev. B. சாமுவேல்

கடந்த இதழின் தொடர்ச்சி....

.... தங்களை விசாரிக்க, நல்வழிப்படுத்த, புரியவைக்க யார் உண்டு என்று கூறுகிற இவ்வாலிபக் கூட்டங்களுக்கு பதில் என்ன? சிந்தியுங்கள்! என்ற மேற்கண்ட வாக்கியத்தோடு கடந்த இதழில் "தொடரும்" என்ற வார்த்தையையும் வாசித்திருப்பீர்கள். இன்னும் கேள்விகள் தொடர்கின்றன.

**வாலிபன் – 4:**

என்னுடைய வயது 18. கல்லூரியில் முதலாமாண்டு படித்துக்கொண்டிருக் கிறேன். எப்படியாகிலும் என்னுடைய நண்பர்களை என்னோடு படிக்கும் சகமாணவர்களையும் ஆலயத்துக்கு அழைத்து வர விரும்பம் அதிகம். ஆனால் என்னுடைய நண்பர்களின் உடை, நடை, பாவனை சற்று வித்தியாசமாக உள்ளது. இவர்களை அழைத்துக்கொண்டு போனால் என்னை சபையார் வேறு கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்கள். அதுமட்டுமல்ல என்னுடைய நண்பர்களும் என்னை வித்தியாசமாக பார்க்கின்றனர். ஐயோ! நான் என்ன செய்த ஆத்தும ஆதாயம் செய்ய ஆசை, ஆனால் எப்படி சமநிலையோடு செயல்படுவது என்று தெரியவில்லை. யாராகிலும் எனக்குக் கற்றுத்தர முடியுமா?

**வாலிபன் – 5:**

எனக்குப் பாடும் திறமை கிடையாது. இசை மொத்தத்தில் எனக்கு அநியாயமான ஒன்று. ஆனால் சில நுணுக்கமான கலைப்பொருட்களைச் செய்யும் ஆர்வமும் ஏன் திறமையும் கூட என்னில் உண்டு. ஆனால் நான் எனது திறமையை வெளிப்படுதத சபையில் வாய்ப்புண்டா? இத்திறமைகளுக்கு சபையில் வாய்ப்புண்டா? இத்திறமைகளுக்கு சபையில் உண்டாகம் வரவேற்மைவிட வெளியில் அதிக வரவேற்பு உண்டு. இயேசுவுக்காக என் திறமையை பயன்படுத்த விரும்புகிறேன். வாய்ப்பு கிடைக்குமா? கொடுக்கப்படுமா? ஏங்கிறேன்.

இப்படி இன்றைய வாலிபர்களின் ஏக்கங்களும் கேள்விகளும் ஏராளம்! ஏராளம்!!, இவைகளுக்கு இன்றைய கிறிஸ்துவ சபை வைத்திருக்கும் பதில்கள் என்ன?

1. யாத்திராகமம் 24:5 – மோசே பலி செலுத்த வாலிபர்களையே பயன்படுத்தினார்.
2. 1 சாமுவேல் 17:58 – கோலியாத்தை கொன்றது ஒரு வாலிபனே !
3. 1 சாமுவேல் 14:1 – யோர்தானின் ஆயுததாரி ஒரு வாலிபனே!
4. 1 சாமுவேல் 25:5 – தாவீதோடு இருந்தது வாலிபர்களே !
5. அப்போஸ்தலர் 23:17 – பவுலின் ஜீவனை பாதுகாத்தது ஒரு வாலிபன்.
6. எண்ணாகமம் 25:7,8-தேவ கோபத்தை நிறுத்தினது பினெகாஸ் என்ற வாலிபனே
7. நியாயாதிபதிகள் 16:26- பின்மாற்றமடைந்த சிம்சோனை தேவசித்தத்திற்கு நேராக கைலாக கொடுத்து நடத்திய பிள்ளையாண்டாள் ஒரு வாலிபனே.
8. 1 சாமுவேல் 3:10-21 தேவன் நம்முடைய திட்டத்தை பகிர்ந்த கொண்டது ஒரு இளவாலிபனாகிய சாமுவேலிடம்.
9. அப்போஸ்தலர் 23:16-18 – பவுலின் ஜீவனை காத்தது ஒரு வாலிபனே.
10. மாற்கு 3:16-19 – இயேசுவின் சீஷர்கள் அனைவருமே வாலிப வயதில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களே !....

இவ்வாறு ஏராளமான வாலிபர்களை வேதத்தில் இருந்து சுட்டிக்காட்ட முடியும். இவர்களெல்லாரும் குறையில்லாத பரிபூரண பரிசுத்தவான்கள் அல்ல. ஆனால் குறைகளோடு ஏற்றுக்கொள்ளப்பட்டு வளர்ச்சியின் பாதையில், முன்னேற்றத்தின் பாதையில் ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் தேறினவர்களாக மாறும்படி தேவனால் வழிநடத்தப்பட்டவர்கள். ஜன்னலில் உட்கார்ந்து பிரசங்கம் கேட்டவன் நித்திரை மயக்கத்தில் மூன்றாம் மெத்தையிலிருந்து விழுந்தவன் ஐத்திகு என்னும் வாலிபன். அவனை மற்ற அனைவராலும் மரித்தவனாய் எடுக்கப்பட்டான். ஆனால், “இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது” என்று கண்டவன் பவுல். இன்றைய சபைக்கு பவுலின் கண்கள் தேவை. இன்றைய காலகட்டத்தில் உள்ள வாலிப சமுதாயத்தினர் மரித்தவர்கள் அல்ல. அவர்களுக்குள் ஜீவன் இருக்கிறது. சற்று கவனம் செலுத்தினால் உயிருள்ள சேனையாக எழும்பி அநேகரை ஆறுதல்படுத்துவார்கள். வாலிபர்களை புரிந்துகொள்வோம். தேவ இராஜ்ஜியத்தை கட்டியெழுப்புவோம். தேறினவர்களாக வாலிபர்களை மாற்ற தேறினவர்களாக மாறுவோம்!.

## வேதாகம விடுகதைகள்

1. கடுகு சிறுத்தாலும்
காரம் குறையாது
கடுகைப் போன்ற சங்கீதம்
கர்த்தரைப் போற்றும் சங்கீதம்
இரண்டு வசன சங்கீதம்
- அது என்ன?

2. வடக்கு திசை பர்வதம்
வடிப்பமான பர்வதம்
மகிழ்ச்சி நிறைந்த பர்வதம்
மகாராஜாவின் பர்வதம்
- அது என்ன?

3. விளையாட்டுப் பேச்சு
வினையாய் போச்சு
விளையாட்டுப் போன்று பேசியே
உள்ளத்தில் தையல் போடுவான்
- அவன் யார்?

4. ஓட்டம் ஐயா ஓட்டம்
உருண்டு புரண்டு ஓட்டம்
தெய்வங்களை விட்டு ஓட்டம்
பெலிஸ்தர் ஓடிய ஓட்டம்
பெயரைப் பெற்ற ஓட்டம்
- அது எந்த இடம்?

**விடைகள் :**

1. சங்கீதம் 117
2. சீயோன் பர்வதம் (சங்கீதம் 48:2)
3. கோள்காரன் (நீதி.26:22)
4. பாகால் பிராசீம் (1 நாளா. 14:11)

## பாராட்டுக்கள்

2017-ம் ஆண்டு பரிபூரண ஜீவன் வேதவினாப் போட்டியில் தவறாமல் பங்குபெற்று சரியான விடை எழுதினவர்களில் பரிசுக்குரியவர்கள்

**K. பாஞ்சாலி Tr.**
92-A, அண்ணாநகர், மதுரை ரோடு,
ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125.

**T.அருள்செல்வி**
24-சி, நாடார் பஜார், கூமாபட்டி ரோடு,
வத்ராப் - 626 132.

**R. தங்கராஜ்**
VTS காம்ப்ளக்ஸ், மெயின் ரோடு
கடையநல்லூர்.

**மேரிராஜ்**
14, LIC காலனி, K.K.நகர்
மதுரை-625 020.



**பிரேமா கணேசன்**
62, AITVC காலனி, பேயன்விளை போஸ்ட்,
ஆறுமுகநேரி, தூத்துக்குடி மாவட்டம்-628 202.





# உன் பிள்ளைகளை இரட்சித்துக்கொள்ளுவேன்

**Rev. Begin Samuel** (AGCM Director)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை வாசகர்களுக்கு தமிழ்ப்பிரதேச சிறுவர் ஊழியங்களின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். இவ்வாண்டில் கர்த்தர் சிறுவர் ஊழியங்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். தேவன் சிறு பிள்ளைகளை மிகவும் அதிகமாக நேசிக்கிறார். இந்த வருடத்திலும் தேவன் '**உன் பிள்ளைகளை இரட்சித்துக் கொள்ளுவேன்**' (ஏசா.49:25) என்று வாக்குறைத்திருக்கிறார். பராக்கிரமனால் சிறைப் படுத்தப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள். பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார். சிறைப்படுத்தப்பட்டவர்கள் என்றால் ஏற்கனவே பிசாசு பல்லாயிரக்கணக்கான சிறுவர்களைத் தன்னுடைய பிடியில் வைத்திருக்கிறான். கொள்ளையிடப்பட்டது என்பது நம்முடைய சபையில் உள்ள, நம்முடைய குடும்பத்தில் உள்ள பிள்ளைகளை ஏமாற்றி தன்னுடைய வஞ்சக வலையில் வைத்துள்ளான். இவர்களைத் தேவன் இவ்வருடத்தில் இரட்சித்துக் கொள்வேன் என்று வாக்கு தந்திருக்கிறார். இந்த வாக்குத்தத்தம் நம் வாழ்வில் நிறைவேற நாம் என்ன செய்ய வேண்டும் என்று சில காரியங்களை நாம் தியானிப்போம்.

**1. தரிசனம் வேண்டும்** (ஏசாயா 49:18) **(We should have a vision)**

தரிசனம் என்பது நிகழ்காலத்தையும், வருங்காலத்தையும் இணைக்கும் பாலமாக விளங்குகிறது. உங்களுடைய பிள்ளைகளைக் குறித்து, உங்கள் தெருக்களில், உங்களுக்கு அறிமுகமான சிறுவர்களைக் குறித்து உங்களுக்கு பாரம் உண்டா? இவ்வருடத்தில் உங்கள் தரிசனம் என்ன? சிந்தித்துப் பாருங்கள். அவர்களுடைய ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கு நீங்களும் உத்தரவாதிகளாய் இருக்கிறீர்கள்.

**2.காத்திருக்க வேண்டும்** (ஏசாயா 49:23) **(We should wait upon the Lord)**

ஏசாயா 49:23-ல் நான் கர்த்தர் எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை என்று வாசிக்கிறோம். எனவே நம்முடைய தரிசனம் நிறைவேற நாம் தேவ சமூகத்தில் காத்திருக்க வேண்டும். ஒரு சில நாட்களில் நாம் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாது. எபிரெயர் 10:36-ல் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது என்று வாசிக்கிறோம். எனவே பொறுமையோடு நம்முடைய விண்ணப்பங்களை தேவ சமூகத்தில் வைத்து காத்திருப்போம்.

**3. பிசாசோடு எதிர்த்து நிற்க வேண்டும்** (ஏசாயா 49:24) **(We should resist Satan)**

பராக்கிரமனால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள். பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும் (ஏசா.49.25) . இன்று சிறுவர்களை பிசாசானவன் தன்னுடைய பிடிக்குள் வைத்திருப்பதை நாம் அநேக நேரங்களில் பார்க்க முடிகிறது. சிறு வயதிலேயே பல பாவ பழக்கவழக்கங்களுக்கு அடிமைகளாகி வன்முறைகளில் ஈடுபடுவதையும் தேவபயம் அற்றவர்களாக துணிகரமான காரியங்களில் ஈடுபடுவதையும் அனுதினமும் கேள்விப்படுகிறோம். 1 பேதுரு 5:8-ல் கூறியுள்ளபடி பிசாசனவன் எவனை விழுங்கலாமென்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். எனவே பிசாசோடு ஜெபத்தில் யுத்தம்பண்ணி நம் பிள்ளைகளைக் காத்துக்கொள்வோம்.

# THE BLESSINGS OF JESUS' RESURRECTION

## Because Jesus has risen from the dead, we can have the following blessings in our lives

1. **PARDON TO SAVE US**

   The risen Jesus has given us the forgiveness of sins. If Christ was not raised, we are still in our sins (1 Cor. 15:17). Since Christ rose from the dead, we can have our sins forgiven and cleansed (Acts 13:37, 38). The Resurrection was God's AMEN to Christ's "It is finished"!

2. **PRESENCE TO SURROUND US.**

   The risen Jesus has promised his presence in our lives when he said, "Behold, I am with you always, even to the end of the world" (Matthew 28:20; Acts 18:10).

3. **PEACE TO SECURE US.**

   The risen Jesus said to his troubled disciples, "Peace be with you" (John 20:19, 21, 26; 14:27). When we face challenges in life, Jesus can break in anytime, anywhere to bring peace to our tormented and troubled souls.

4. **POWER TO STRENGTHEN US.**

   The risen Jesus gives us the power through the Holy Spirit to live a victorious life and to be His witnesses (Acts 1:8; John 7:38, 39; Ephesians 1:19-20; Phil. 3:10; 4:13).

5. **PROMISE TO SATISFY US.**

   The risen Jesus is preparing a place for us and has promised to come back (John 14:1-3). The resurrection of Jesus has given us a living hope (1 Pet. 1:21). Since Jesus died and rose again, we will also rise and be with the Lord forever and ever (1 Thess. 4:14-16; 1 Cor. 15:22, 23; Job 19:25).

6. **PRAYER TO SUSTAIN US.**

   The risen Jesus is still very active in heaven on our behalf. He is always pleading our case before the father and interceding for us (Heb. 7:25; Rom. 8:34; 1 John 2:1)

7. **PURPOSE TO STIR US.**

   The risen Jesus has given me a purpose to live for in this world. That purpose is to fulfil his Great Commission by preaching the gospel to all the nations (Matthew 28:18-20; Luke 24: 47, 48; John 20:21; Mark 16:15-20)!

## போட்டி எண் : 69 (சரியான விடைகள்)

(1) சகரியா; (2) தாவீது; (3)பேலேகு; (4) சாலொமோன்; (5) ஊலாமின் குமாரர்; (6)எல்க்கானான்; (7)பினெகாஸ்; (8)யாபேஸ்; (9)சாமுவேல்; (10)யோசபாத்; (11)யோனத்தான்; (12)பெனாயா; (13)ஏமானுக்கு; (14)கெனானியா; (15)யோவாப்; (16)அசரியா; (17)கெர்சோம்,எலியேசர்; (18)எபூசியனாகிய ஒர்னானின் களத்தண்டையிலே நின்றான்; (19)தாவீதுக்கு; (20) ஊசா.

---

## போட்டி எண் : 69 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை** : அமுதா; கிரிஜா; ஸ்வீட்லின்; டோரா; புஷ்பவள்ளி; K.மஞ்சு; கந்தையா; K.விஜி; மாரிமுத்து; T.ஜெபா; கோகிலா; மாது; பியூலா; சித்ரா; சுபா; மகேஸ்வரி; கலா; புனிதா;தங்கமணி;குளோரி; G.முத்துலெட்சுமி; S.முத்துலெட்சுமி; A.மஞ்சு; மரகதம்; ராதாமணி; கிறிஸ்டி;காவியா;ஆனந்தி;S.ஜெயா|**ஸ்ரீவில்லிபுத்தூர்**:ஜெசிக்கா ஆக்னஸ்; மெசி; ஜெயராணி; நித்யா; டெய்சிராணி; இவாஞ்சலின் ஆக்னஸ்; சத்யா; காபிரியேல்; ஆபிரகாம்; ஞானம்; அனிதா|**கடையநல்லூர்** : வினோலியா; தங்கராஜ்; மேரிகுட்டி; ஆஷாதேவி; நளினி; செல்வி இந்திராணி;|**சென்னை**: ஜெனிட்டா தங்கராணி;பெர்சிஸ் ஜாய்; மெர்லின் ஹெலன் பிரித்தியா; ஷீலா; |**வத்ராப்**: அருள்செல்வி; கிறிஸ்டி;ஜெபராணி;ஜெஸ்ஸி;|**கிருஷ்ணகிரி**:அனிதா ஷைலா; ஐடா; அபிநயா; ஐஸ்வர்யா; அன்பு ஜெயா; ஆனி மெர்சி; ரேச்சல்|**கொட்டாங்குளம்**: ஏஞ்சல்ராணி; ஜான்சிராணி; ரக்ஷனா; எலிசபெத்; ஜெபமேரி; ரெஜினா; |**ஆறுமுகநேரி**: பானுமதி; பிரேமா ; ஜாய்ஸ்மேரி; கஸ்தூரி; வெண்ணிலா எஸ்தர்; |**ஆலங்குளம்** :பிளாரன்ஸ்; ரெஜினா சாரு; லதா; ஸ்டெல்லா; ஜெய பாரதி; |**மடத்துக்குளம்**: ஜாய்ஸ்மேரி; ஜீன்மெர்லின் கிருபா; ஜெனிட்டா ஜீலியட்மேரி; சேர்மக்கனி; | **தூத்துக்குடி**: சாந்தி; ஸ்டார்லினா; ஜெஸிலா; சகாயமேரி; முத்துப்பாண்டியன்;|**வந்தவாசி**:அபிஷா சுமதி; ஜீலியட்; நித்யா;| **திசையன்விளை**: லீலா; ராணி; ஜெயசீலி; | **தேனி**: மீனா; கிருபா; திரவியச் செல்வி | **சொக்கன்குடியிருப்பு**: மேரி; பிரின்னீஸ் | **நாகமலை**: விஜிலா; ஹில்டா எலிசபெத்| **கம்பம்**: ஜென்ஸி; வடிவுக்கரசி;ஜீலி|**திருச்சி**: கிறிஸ்டி மகாலஷ்மி; சுகந்தி| **திருத்துறைப்பூண்டி** : மெர்லின்; ஹெப்சி; சண்முகம்; ஆர்த்தி|**அந்தமான்**: விஜய்; ஜேக்லின் |**நாசரேத்**: தாசன்மோசஸ்; ஜெபிபாய் |**பரமத்திவேலூர்**: திருசெல்வி; பாமா | **புளியங்குடி**: பிரின்ஸி ஜாய்; ஞானமணி;|**மதுரை** :மேரி; அமுதா | **முத்தையாபுரம்**: மங்களம்; ஜீவிதா | **தர்மபுரி** : ரூத்; எஸ்தர் |**பள்ளிக்கரணை** : ஜோதி; கீதாமகேஸ்வரி | **ஆண்டிபட்டி** : புளோரியா; தேவபாக்கியம்; மேரி |**கிச்சிபாளையம்** : ஜெயரூபி; கிறிஸ்டல் ஜான்; ராணி |**பெருந்துறை** : கெத்சியாள் |**குரோம்பேட்டை** : ரெபேகாள்; ஜோதி | **வடக்கு ஆத்தூர்** : சாமுவேல்; டேவிஷா| **ஆலங்குளம்** : பெய்த்ஸ்தேவான்|**வெம்பகோட்டை**: ரோஸ்லின் | **காரைக்கால்** : உமா; ராஜாமணி | **வத்ராப்** : பிரிஸ்கில்லா | **சாத்தூர்** : சங்கீதா | **V.K.புரம்** : நிர்மலா | **கடாட்சபுரம்** : ரேவதி |**சின்னாளபட்டி** : சலோமி | **வளையபட்டி** : ஜாயல் பெரிசிஸ் | **பழனி** : பிரீத்தி | **கோணம்** : மரியநேசம்|**திருநின்றவூர்** : எழிலரசி |**வேலூர்** :கிருபாகரன் | **களக்காடு** : வசந்தா | **கேளம்பாக்கம்** ரோஸ்லின் மேரி | **நல்லூர்** : ஜேஸ்மின் | **நீர்முளை** : ஜெயந்தி | **புதுக்கோட்டை** : லலிதா | **சாத்தூர்** : லாவண்யா | **கோவை** : சலோமி பெர்னடு | **களக்காடு** : விமலா | **பரமன்குறிச்சி** : லதா; செல்வி | **புளியங்குடி** : சுந்தரி | **திருவள்ளூர்** :ஏஞ்சல் | **பூண்டி** : அமுதா | **வெள்ளோடு** : விசுவாசமேரி | **தேனி** :பூங்கோதை | **கொங்கந்தான்பாறை** : சந்திரா | **கூவத்தூர்** : எட்வர்ட் |**திருச்செந்தூர்**: பியூலா; **சிட்லபாக்கம்** : தாமரைச்செல்வி | **வெண்ணாம்பட்டி** : நீனாபிரித்தா | **வில்லியனூர்** : புரோமிகா; சாரா | **திருநெல்வேலி** : செல்வின் ஜோசப் |**பண்ணைவிளா** : பீபி ஷெக்கினா |

## போட்டி எண் : 69 (சரியான விடை எழுதியவர்கள்)

**காட்பாடி** : பால்பிச்சமுத்து | **உவரி** : ஜேனட் | **சாயர்புரம்** : தேன்மொழி| **பனங்காநத்தம்** : தங்கம் | **அரும்பாக்கம்** : சற்குணம் | **திண்டிவனம்** : சாராள் அறிவுச்செல்லி | **செம்பாக்கம்**: மரகதலீலா | **பெரும்பாக்கம்** : பியூலா| **மேடவாக்கம்** : கிருபாகரன் தாமஸ்| **இடையன்குளம்**: வயலட்மேரி | **வெள்ளாளன்விளை** : சரஸ்வதி| **T.N.பாளையம்** : சுஜா| **விருத்தாச்சலம்** : சுகிர்தா | **புத்தூர்** : சுஜாதா.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் – 70

(2 நாளாகமம்)

சம்மந்தப்பட்டவைகளை சம்மந்தப்படுத்தி பொருத்துக

| | |
|---|---|
| 1. எலியாதா | - கர்த்தருடைய தீர்க்கதரிசி |
| 2. யாகீன், போவாஸ் | - கப்பல்கள் |
| 3. உசியா | - புத்திமானாகிய நிபுணன் |
| 4. இல்க்கியா | - அணை கட்டியவன் |
| 5. யோராம் | - அசீரிய ராஜா |
| 6. பெராக்கா | - ஆறு |
| 7. எசேக்கியா | - வெள்ளாண்மைப் பிரியன் |
| 8. உல்தாள் | - பராக்கிரமசாலி |
| 9. அபி | - நேபாத்தின் குமாரன் |
| 10. ஓதேத் | - ஸ்தோத்திரம் |
| 11. செமாயா | - புலம்பல் பாடியவன் |
| 12. மனாசே | - தீர்க்கதரிசி |
| 13. செப்பத்தா | - மலை |
| 14. யெரொபெயாம் | - இம்லாவின் குமாரன் |
| 15. தர்ஷீஸ் | - தூண்கள் |
| 16. எரேமியா | - தேவனுடைய மனுஷன் |
| 17. கீதரோன் | - வெண்கலச் சங்கிலி |
| 18. தில்காத்பில்நேசர் | - ஆசாரியன் |
| 19. மிகாயா | - சேஷ்ட புத்திரன் |
| 20. மோரியா | - பள்ளத்தாக்கு |

| | |
|---|---|
| விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 31.03.2018 | சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும். |



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**"பரிபூரண ஜீவன்"**
**Sis.சாந்தி பால், W/o. Rev. பால் பிரகாசம்**
A.G. Church, 23- மெயின்ரோடு,செங்கோட்டை - 627 809
செல்: 88077 18002





சபை வளர்ச்சி கருத்தரங்கு – மத்திய பிராந்தியம், திருச்சி





திருநெல்வேலி, விருதுநகர் மண்டலங்களின் உபவாச ஜெபம் – 2018









தூத்துக்குடி மண்டல பெண்கள் முகாம்





Registered News Paper Regd. No. 8206 / 62

## AGTBC - 70வது வருட கொண்டாட்டம்

















**BOOK POST**

If Undelivered please return to
PARIPOORANA JEEVAN
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165